Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு யாழ்ப்பாணம் விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 09 (01.03.2004) திங்கட்கிழமை இதழ்:152

## புலிகளின் விடுதலைப் போராட்டத்துக்கு அரசியல் ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

### அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தியாகத்தை மதிக்கின்றோம். அவர்களின் போராட்டத்துக்கு அரசியல் ரீதியாக ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோமென அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

தலாவாக்கொல்லை சிறிகதிரேசன் ஆலய கலாசார மண்டபத்தில் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சி அமைப்பதற்கு மலையக மக்கள் உறுதுணையாக இருக்கவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு இந்த நாட்டின் நிரந்தர சமாதானத்துக்கு வழிகோலுகின்றது. எனத் தெரிவித்தார்.

## மீண்டும் ஆட்சியைப் பிடித்ததும் சமாதான முயற்சி தொடரப்படும்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதய சமாதான வேலைத்திட்டத்தை எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சியமைத்ததும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும். அதற்கான சர்வதேச உதவிகள் முன்னர் போன்று தொடர்ந்த கிடைக்குமென, மாத்தளை -ரத்தோட்டை பஸ்நிலையத்துக்கருகில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டதில் பேசும்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

சமாதானமும் பொருளாதாரமும் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் தெளிவான கொள்கை எதுவும் இல்லை.

நிபந்தனைகளற்ற வகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயார் எனத் தெரிவித்தபோதும் அது தொடர்பான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும்.

முன்னணியிடம் இது தொடர்பான கொள்கை ஒன்று இல்லாத காரணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் ஒரு யுத்தம் ஒன்றுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. வேட்பாளர் மீது மட்டக்களப்பில் சூடு!

(மட்டக்களப்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை மீது இனந்தெரியாத இளைஞர் குழு மேற்கொண்ட துப்பாகிப் பிரயோகத்தில் காயமுற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினமிரவு 11.30 மணியளவில் ஆரையம்பதி காளி கோவில் வீதியில் உள்ள இவரது இல்லத்திற்கு கைத்துப்பாக்கியுடன் சென்ற இளைஞர் குழு - இவரை வீட்டிற்கு வெளியே வருமாறு அழைத்தது.

இதனைத் தொடர்ந்து வீட்டிற்குள் நுழைந்த இளைஞர் குழு வேட்பாளரையும், வேட்பாளரின் மைத்துனரையும் தாக்கிவிட்டு வேட்பாளரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் சாரதி மருதானையில் சுட்டுக் கொலை

(கொழும்பு)

மருதானை - பஞ்சிகாவத்தை பகுதியில் தனியார் பஸ் சாரதி ஒருவர் இனந்தெரியாத நபர் ஒருவரால் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

134 ஆம் இலக்க அங்கோடை - கல்கிசை பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆமர் வீதியிலிருந்து பஸ்ஸில் ஏறிய பயணி ஒருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், தனிப்பட்ட பிரச்சினையே இக்கொலைக்கு காரணமாக இருக்கலாம் என்றும் மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை தங்காலைப் பகுதியிலும் நேற்றுக் காலை நபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படக் கூடாதாம்!

### ஜே.வி.பி. கூறுகின்றது

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படக்கூடாதென ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக ஜே.வி.பியின் அரசியல் குழு விடுத்துள்ள அறிக்கையில் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இராணுவத்தினரோ, பொலிஸாரோ கடமையாற்றமுடியாத நிலை நிலவுகின்றது.

இவ்வாறான பகுதிகளிலும் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென சிலர் கோரி வருகின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் வாக்களிப்பை நடத்த முடியாது!

### அரசாங்கத் தரப்பும் கூறுகின்றது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்புக்களை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர், தேர்தல் திணைக்களம், இராணுவம் என்பன மேற்படி முடிவிற்கு ஆதரவாக தமது கருத்துக்களை தெரிவித்துள்ளன.

பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தனது கருத்தைத் தெரிவிக்கையில் -

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பு இடம்பெறுமானால் அது யுத்தநிறுத்த மீறலுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு விஞ்ஞாபனம் இன்று மாலை வெளியிடப்படும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்படவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்களின் தேசியத்தையும், அடிப்படைத் தேவைகளையும் வலியுறுத்தும் வகையில் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர்தல் விஞ்ஞாபனமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வேட்பாளர்களதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் முக்கிய பிரமுகர்களின் ஆழ்ந்த பரிசீலனையின் பின்னரே முன்வைக்கப்படுகிறது.

இது தொடர்பாக கடந்த வாரம் கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களும், க்லந்தாலோசனை நடத்தியிருந்தமை அனைவரும் அறிந்ததே.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீடு சின்னத்துக்கு தடை; முறைப்பாடு நிராகரிப்பு!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்லில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்தை பயன்படுத்துவதை தடைசெய்யக் கோரி அந்தக் கட்சியின் தலைவர் ஆவரங்கால் சின்னத்துரை லண்டனிலிருந்து தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்த ஆட்சேபக் கடிதத்தை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை நிராகரித்தார்.

வேட்பு மனுத்தாக்கல் முடிந்த பின்னரேயே இவரது இந்த ஆட்சேபக் கடிதம் கிடைத்ததாகவும், அதனாலேயே இது நிராகரிக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளருக்கு சின்னத்துரை அனுப்பிய கடிதத்தில் -

தமிழரசுக் கட்சியின் தலைவராக நானே தொடர்ந்து இருகிறேன், ஆனால் தமிழ்த் தேசிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பது கடமை!

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி ஆகிய பிரதேசங்களில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டுமென, உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இதனால், இப்பிரதேசங்களில் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பிரச்சினைகள் எதுவுமின்றி தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் வாக்குச்சாவடிகளை அமைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதி வாக்காளர் தடுக்கப்பட்டால் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோருவேன்!

### மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கூறுகிறார்

(மட்டக்களப்பு)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளருக்கான வாக்களிப்பு நிலையங்களை சூனியப பிரதேசத்தில் அமைக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுப்போம். அவ்வாறு அமைக்கப்படாவிட்டால் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 79 ஆயிரம் வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிப்பதற்கு இராணுவத்தினர் தடையாக இருந்தால் இந்த மாவட்டத்துக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு சிபார்சு செய்ய தான் முடிவெடுத்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும், மாவட்டத் தேர்தல் தெரிவு அத்தாட்சி அதிகாரியுமான மோனகுருசாமி பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று லட்சத்து மூவாயிரம் வாக்காளர்கள் இருக்கின்றனர். இந்த வாக்காளர்களுக்கு 345 வாக்குச் சாவடிகள் அமைக்க வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




சொலமன் சூ. சிறில்



(யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரும், யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்

— பொது அமைப்புக்கள்



11

சமூக முன்னேற்றக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சு.மோகனதாஸ், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலிரு படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : ஜெரால்ட்)

# தேசவிரோத சக்திகளை நிராகரித்து<br>கூட்டமைப்புக்கு ஆதரவளிப்போம்!

## உயர்தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம் அறிக்கை

தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என மார்பு தட்டும் தேசவிரோதிகளை நிராகரிப்போமென இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவன மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிக்காட்டுவதற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை தமிழ் மக்களாகிய நாம் எதிர்கொள்வோம்.

ஆண்டாண்டு காலமாக அந்நியரால் விலைக்கு வாங்கப்பட்டும் அடக்கி ஒடுக்கப்பட்டும் இருந்த எமது இனம் விடுதலைக் காற்றை சுவாசிக்கும் வேளை நெருங்கிவிட்டது. தமிழர்களாகிய நாம் உறுதியாக இருக்கிறோம் என்பதைவிட இன விடுதலைக்காக கூட்டாக இருக்கிறோம் என்பதையே வெளிப்படுத்தவேண்டும்.

ஆரம்பத்தில் சிங்கள வல்லாதிக்கத்துடன் எமது முதியோர்கள் கைகோர்த்து நின்றார்கள். ஆனால் எம்மவர் கோர்த்தகையை தருணம் பார்த்து அந்நியர்கள் வெட்டினார்கள். அஹிம்சை வழியிலே போராடினார்கள். பலன் ஏதும் கிட்டவில்லை. எமது தலைவர்களை இழந்ததுதான் நாம் கண்ட மிச்சம். ஆயுத வழியில் தமிழினம் போராடி இன்று வலுப்பெற்று ஒரு புதுவியூகம் எடுத்து நிற்கின்றது. ஏறத்தாழ 18000 வீர மறவர்களை தேசவிடுதலைக்காய் இழந்து நிற்கிறது எமது இனம்.

இன்று சர்வதேச சமூகம் எமது பக்கம் தமது பார்வையைத் திருப்பிவிட்டுள்ளது. இந்த வேளையில் எதிர்வரும் தேர்தலில் தமிழர் தேசிய கூட்டமைப்புக்கு நாம் அனைவரும் தவறாது வாக்களிப்பதனூடாக எமது ஒற்றுமையை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுவதுடன் எம் மத்தியில் இருந்து தமிழினத்தை விற்று தாமே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என மார்புதட்டும் தேசவிரோதிகளை நிராகரிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜன்னல் உடைத்து பணம், நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை - பழம்வீதியில் உள்ள வீடொன்றில் வீட்டார் உறக்கத்தில் இருந்த சமயம் நகை, பணம முதலியன திருடப்பட்டுள்ளன. .

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வீட்டார் உறக்கத்திலிருந்த சமயம் வீட்டின் சாமி அறையின் யன்னல் கம்பிகளை அகற்றிவிட்டு நுழைந்த திருடர்கள் பத்துப் பவுண் தங்க நகைகளையும் பத்தாயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இது தொடர்பாக பொலிஸில் முறையிடப்பட்டள்ளது. (46)

# மல்லாகம் மகாவித்தியாலய அணி மென்பந்து கிரிக்கெட்டில் சம்பியன்

யாழ். மாவட்ட வலய பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்த வாரம் தெல்லிப்பழை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவந்த வலிகாமம் வலய மென்பந்து கிரிக்கெட்போட்டிகளில் மல்லாகம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இந்தப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற மல்லாகம் மகாவித்தியாலயமும் மகாஜனாக் கல்லூரியும் மாவட்ட மட்ட போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளன.(58)

# மென்பந்து கிரிக்கெட் இறுதிப்போட்டி இன்று!

யாழ.வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் கோட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலத்தில் நடைபெற்றுவரும் வலயமட்ட இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கொழும்புத்துறை ஜோசப மகாவித்தியாலயத்தை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரியும், 10.30 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் யாழ்மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் மோதவுள்ளன. (58)


நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், சிம்ரன் நடித்த

ஒற்றன்

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

BLOOD SPORT - 2

(சி-2262)

ராஜா யாழ்ப்பாணம்.



இன்று முதல் தனுஷ், அபர்ணா, கருணாஸ் நடித்த

புதுக்கோட்டையிலிருந்து சரவணன்

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2197)

ஹோமன் கத்தோலிக்க மாணவர் நன்மை கருதி

1 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டுவரை விவிலிய வெளியீடான ஞான உபதேச புத்தகம் விற்பனைக்கு உண்டு

1 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆம் ஆண்டுவரை - 20/-

7 ஆம் ஆண்டிலிருந்து 9 ஆம் ஆண்டுவரை - 30/-

10 ஆம் ஆண்டிலிருந்து 12 ஆம் ஆண்டுவரை - 33/-

A/L - 60/-

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் - 285/-

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 021222 5542

(சி-2264)

உடன் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் போன் சொப் (Phone shop) நிலையத்தில் கடமையாற்றுவதற்கு விற்பனயையாளரும், உதவி விற்பனயையாளரும் (பெண்கள் மட்டும்) உடன் தேவை.

தொடர்புகளுக்கு:-

டயலொக் போன் சொப்

கே.கே.எஸ் வீதி,

சுன்னாகம்.

வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்த

சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபத்தினரின் புதியதோர் அறிமுகம்

கொழும்பு விலைக்கே வன்னியில்!

உமஸாக்கி ஜூடோ 125CC

உமஸாக்கி FD100-6B

மூன்று சுத்திகரிப்பு இலவசம். 10,000 km க்கு உத்தரவாதம்

சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

இல. 496,496/1 நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

(வன்னிப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)






# 120 ஆசனங்களை எமது கட்சி கைப்பற்றும்!

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 113 ஆசனங்களைக் கைப்பற்றும். ஆனால், ஒட்டுமொத்த ரீதியில் இந்த முனணி 120 இலிருந்து 130 வரையான ஆசனங்களைப் பெறும். இதன்மூலம் நாங்கள் நேரடியாகவே வெற்றியைப்பெற்றுவிடுவோம்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கலதாரி ஹோட்டலில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

ஜாதிக ஹெல உறுமய கட்சியின்கீழ் புத்தபிக்குள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதால் ஐக்கிய மக்க்ள் சுதந்திர முன்னணிக்கு எதுவித பாதிப்புமில்லை.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தில் அதன் வாக்காளர்கள் சலிப்படைந்துவிட்டனர். இந்த வாக்குகள் சிலவேளை ஜாதிக ஹெல உறுமயவிற்குச் செல்லலாம். எவ்வாறெனினும் புத்தபிக்குகளால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகள் பாதிப்படையமாட்டாது.

தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே தற்போதைய அரசாங்கத்தை அகற்றவேண்டுமென மக்கள் தீர்மானித்துவிட்டனர். எனவே ஜாதிக ஹெல உறுமய மக்களின் இந்த முடிவை மாற்றமுடியாதெனவும் தெரிவித்தார்.

# அடுத்த மாதம் 2 ஆம் வாரத்தில் சர்வதேச பார்வையாளர் இலங்கைக்கு வரவுள்ளனர்

பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்காக சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் அடுத்தமாதம் 2 ஆவது வாரத்தில் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக, தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பு, ஐரோப்பிய ஆணைக்குழு, வெளிநாட்டு நிறுவனங்கள், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

பங்களாதேஷ் தேர்தல் ஆணைக் குழுவைச் சேர்ந்த 30 பிரதிநிதிகளும் பாகிஸ்தான் தேர்தல் ஆணைக் குழுவைச் சேர்ந்த 25 பிரதிநிதிகளும் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

இவர்களை இலங்கைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

எதிர்வரும் பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்குச் சுமார் 150 சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேர்தல் ஆணையாளரின் அழைப்பையேற்று வருகைதரவுள்ளனர் என்றும் தேர்தல் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# இத்தாலி செல்லமுயன்ற பத்து தமிழர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லமுயன்ற 10 பேர் நீர்கொழும்பில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் வடபகுதியைச் சேர்ந்த தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒவ்வொருவரும், தலா 4 லட்சம் ரூபா கொடுத்து இந்தப் பயணத்தை மேற்கொள்ள இருந்தனர். இந்தப் பயணத்துக்கான ஏற்பாட்டைச் செய்தவர் ஒரு சிங்கள வர்த்தகர் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# திருகோணமலை மாவட்டத்தில் 278 வாக்களிப்பு நிலையங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 278 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றில் சேருவில பகுதியில் 87 இடங்களிலும், மூதூர் பகுதியில் 34 இடங்களிலும், திருமலை தேர்தல் தொகுதியில் 97 இடங்களிலும் இந்த வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் திருமலை மாவட்டத்தில் இம்முறை 2,24,307 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

மூதூர் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிக்க மகிந்தபுரம் இராணுவ முகாமிற்கு அருகிலும், கட்டைப்பறிச்சான் மக்களுக்கு கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமிற்கு அருகிலும் பள்ளிக்குடியிருப்பு பிரசேத்திலும் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள மக்கள் கொத்தணி வாக்குச்சாவடிகளுக்குச்சென்று வாக்களிப்பதற்கான போக்குவரத்து வசதிகளை தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 4000 ஊழியர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் 20 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன. இவற்றில் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் இடம்பெயர்ந்தோரது வாக்குகளும், மூன்று நிலையங்களில் தபால்மூல வாக்குகளும், 16 நிலையங்களில் சாதாரண வாக்குகளும் எண்ணப்படவுள்ளன. (04)

# தேர்தலுக்கான செலவு திட்டமிட்டதைவிட அதிகம்

## தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதலான வேட்பாளர்கள் போட்டியிடுவதால், திட்டமிட்டதற்கும் அதிகமாக தேர்தலுக்குச் செலவீடுசெய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிபொருள் விலை உயர்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் - கடந்தவாரம் தேர்தல் திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீடுகளில் இருந்து சுமார் 600 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் எனத் தெரிவித்திருந்தது.

ஆனால், இம்முறை தேர்தலில் மிகக்கூடியளவான வேட்பாளர்கள் இதுவரையில்லாதளவு எண்ணிக்கையில் போட்டியிடுவதால் தேர்தல் செலவு அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை 5698 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். 2001 ஆம் ஆண்டு தேர்தலில் 5048 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். கடந்த தேர்தலைவிட இம்முறை 650 வேட்பாளர்கள் அதிகமாகப் போட்டியிடுகின்றனர்.

இதனால், மாவட்டங்கள்தோறும் தேர்தல் செலவுகள் அதிகரித்திருக்கின்றன. தேர்தல் திணைக்கள கணக்காளர் எச்.ஏ.எஸ்.ஹப்பு ஆராய்ச்சி இதுகுறித்து தெரிவிக்கையில் -

இந்தத் தேர்தலுக்கு 600 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிட்டபோதும், இதற்கு மேலதிகமாக செலவுகள் ஏற்படும். 2001 ஆம் ஆண்டு தேர்தலில் 600 மில்லியன் ரூபா செலவு ஏற்பட்டது. அதைவிட 2000 ஆம் ஆண்டு தேர்தலுக்காக 650 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.

வாக்காளர் ஒருவருக்காக 2001 ஆம் ஆண்டில் 47.98 ரூபாவும், 2000 ஆம் ஆண்டில் 53.70 ரூபாவும் செலவிடப்பட்டது.

இம்முறை வேட்பாளர் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் செலவுத்தொகை அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆதரவாளர்களைத் தாக்கியதாக இரு கட்சிகளும் பொலிஸில் புகார்

(கொழும்பு)

ஆனைமடுவ தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஆனால், இந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமறைவாகியுள்ளதாகவும், இவர் விரைவில் கைது செய்யப்படுவாரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - வென்னப்புவ பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் மூன்று பேரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மூன்று பேர் வென்னப்புவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்!

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக மாற்றுத் தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரங்களில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், பொதுத்தேர்தல் அமைதியாக நடைபெறும் வகையில் சகல கட்சிகளும் செயற்பட வேண்டும்.

பொதுத் தேர்தலின்போது தமிழ் அரசியற்கட்சிகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும்.

பத்துக்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் ஏற்பட்டுள்ளன. பெருமபாலானவற்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியும், ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் கட்சியும் தொடர்புபட்டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

# தேர்தல் வரலாற்றிலேயே மிக நீளமான வாக்குச்சீட்டு

## திகாமடுல்ல மாவட்டத்துக்கு அச்சிடப்படுகிறது

இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே மிக நீளமான வாக்குச்சீட்டு இம்முறை அச்சிடப்படுவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திற்கான மிகவும் நீளமான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படுகின்றன. 27 1/2 அங்குலம் நீளமான வாக்குசசீட்டு இந்த மாவட்டத்துக்காக அச்சிடப்படுகிறது. 14 கட்சிகள், 27 சுயேட்சைக் குழுக்களின் சார்பில் 410 வேட்பாளர்களின் பெயர்கள் இந்த வாக்குச்சீட்டில் இடம்பெற்றுள்ளன. அதேவேளை புத்தளம் மாவட்டத்துக்கு 19 அங்குல நீளமான வாகுச்சீட்டு அச்சிடப்படுகிறது.

பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணி நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்டது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு மூன்று வாரகாலம் செல்லும் என அரசாங்க அச்சக திணைக்களம் தெரிவித்தது.

வாக்காளர் அட்டைகள் அச்சிடுவதற்காக 400 அரச அச்சக பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இம்முறை 14.5 மில்லியன் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்படவுள்ளன.

சென்றமுறை பொதுத் தேர்தலுக்காக 13.3 மில்லியன் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டன. இந்த ஆண்டு 1.2 மில்லியன் அட்டைகள் அதிகமாக அச்சிடப்படவுள்ளது.

இதேவேளை அரச அச்சக பாதுகாப்புக்கென 120 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# வடமேல் மாகாணசபைத் தேர்தல் வேட்புமனுத்தாக்கல் ஆரம்பமானது!

வடமேல் மாகாண சபைக்கான வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான இறுதி திகதி மார்ச் 5 என அறிவிக்கபட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்வரை எந்தவொரு கட்சியும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு காரணம் அனைத்து கட்சிகளும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஈடுபட்டிருப்பதாகும்.

ஆனாலும், இந்த மாகாண சபைக்கான தேர்தல் திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முடிவதற்குள் இந்த மாகாணசபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனுத்தாக்கல் முடிவடைந்து 5 தொடக்கம் 8 வாரத்திற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் அத்துடன் குருநாகல், புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த 1,539,539 வாக்காளர்கள் இந்தமுறை வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் அலுவலர்களுக்கு யாராவது இடைஞ்சல் கொடுத்தும், வாக்குப் பெட்டிகளை எடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் அந்தப்பகுதியில் தேர்தல் நிறுத்தப்பட்டு மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவிடப்படுமென தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தேர்தல் பாதுகாப்பு பணியில் ஊர்காவற்படையினரும்!

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் காலத்தில் பொலிஸாருக்கு உதவியாக ஊர்காவற்படையினரையும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அதேவேளை தேர்தல்பணிக்கு ஊர்காவற் படையினர் பயன்படுத்தப் படுவதற்குத் தமிழ்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஊர்காவற்படையினர் அனைவரும் சிங்களவர்களாக இருப்பதால், எதிர்வரும் தேர்தலில் இவர்களைப் பணியில் ஈடுபடுத்தும்போது நெருக்கடியான சூழ்நிலை உருவாகலாம் என்று தமிழ்க் கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

தேர்தல் வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டே, ஊர்காவற்படையினரையும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

## ஐந்தாவது ஒருநாள் போட்டியில்

# தென்னாபிரிக்காவைத் தோற்கடித்ததன் மூலம் நியூஸிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது!

(ஒக்லன்ட்)

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஒக்லண்டில் நேற்று நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 2 ஓட்டங்களால் தொன்னாபிரிக்காவைத் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த இந்தப் போட்டி மழைகாரணமாக கைவிடப்பட்ட நிலையில் நேற்று நடத்தப்பட்டது. நேற்றும் மழை பெய்த காரணத்தால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் 33 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 33 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களை எடுத்தது.

இந்த அணி ஆரம்பத்தில் தனது விக்கெட்டுக்களை சடுதியாக இழந்தாலும், கிறிஸ் கெய்ன்ஸ், கிறிஸ் ஹரிஸ் இருவரும் கூடுதலான ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை சற்று உயர்த்தினர்.

இந்த அணியின் சார்பாக கெயின்ஸ் 28, ஓரம் 22, ஹரிஸ் 55 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை அணித்தலைவர் பிளமிங் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் என்ரினி 3, குளுஸ்னர் 2, பொலக், மோர்கெல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தென்னாபிரிக்கா ஆடத்தொடங்கிய போது காலநிலை சீரின்மை காரணமாக ஓவர்கள் 29 ஆக குறைக்கப்பட்டதுடன் 178 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமெனவும் டக்வேர்த் லூயிஸ், முறைப்படி தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்க அணி வழங்கப்பட்ட 29 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை மட்டும் எடுத்த காரணத்தால் 2 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

கடைசி ஓவரில் 20 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் 17 ஓட்டங்களை மட்டுமே தென்னாபிரிக்க அணி பெற்றது.

இந்த அணி சார்பாக கலிஸ் ஆட்டமிழக்காமல் 59 பந்துகளில் 58 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் ஆட்டமிழக்காமல் 30 பந்துகளில் 48 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர். மற்றய வீரர்களான ஸ்மித் 15, கிப்ஸ் 13. குளுஸ்னர் 14, மோர்கெல் 11, டிப்பென்னர் 8 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஓரம், கெய்ன்ஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ரபி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரு அணிகளுக்குமிடையிலான ஆறாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.



கிறிஸ்ஹரிஸ்

பரபரப்பான ஒருநாள் போட்டி;

## ஸ்கந்தா அணியிடம் யாழ்.இந்து தோற்றது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விறுவிறுப்பான ஒரு நாள் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினை தெல்லிப்பழை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஒரு விக்கெட்டினால் வெற்றிகொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அருண்குமார் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், ஐங்கரன் 36 ஓட்டங்களையும் தர்சன் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 49.3 ஓவரில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 242 ஓட்டங்களை பெற்று ஒருவிக்கெட்டினால் வெற்றிபெற்றது.

இதில் துஷி 53 ஓட்டங்களையும், பிரதீப் 38 ஓட்டங்களையும், யசிதரம் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். யாழ். இந்து அணியின் சார்பில் தினா 25 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தப் போட்டி ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(58)

## வீரர்களின் போர் இந்த வாரம் ஆரம்பம்

வலிகாமம் பகுதியில் இருபெரும் பாடசாலைகளான மகாஜனாக் கல்லூரிக்கும் - ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும் இடையில் நாலாவது தடவையாக **(Battle Of The Heros)** வீரர்களின் போர் என அழைக்கப்படும் மாபெரும் துடுப்பாட்டம் எதிர்வரும் 5 ஆம் , 6 ஆம் திகதிகளில் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

2001 ஆம் ஆண்டு இரு பாடசாலைகளுக்குமிடையில் ஆரம்பமான இத் துடுப்பாட்டம் 3 வருடங்கள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தன. இம்முறை இருபாடசாலைகளும் அதிக பயிற்சிகளைப் பெற்று சமபலத்துடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.(72)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் யாழ்.கல்விவலய உதவிக்கல்விப்பணிப்பாளர் த.அருணகிரிராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (58)


## ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டி

# இலங்கை மூன்று விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலிய அணியை தோற்கடித்தது

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நேற்று நடைபெற்ற 5 ஆவது இறுதிப்போட்டியில் இலங்கையணி வீரர் சொய்சாவின் சிறப்பான துடுப்பாட்டத்தால் அவ்வணி 3 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றையபோட்டியில் அவுஸ்ரேலிய அணி சார்பில் பொன்டிங், ஹைடன் மற்றும் ஜிலஸ்பி மூவரும் விளையாடவில்லை. இவர்களுக்கப் பதிலாக பதில் விக்கெட் கீப்பர் ஹடின், ஹட்ரிச் மற்றும் பிரட்லீ மூவரும் விளையாடினர். கில்கிறிஸ்ட் அவுஸ்ரேலிய அணிக்குத் தலைமை தாங்கினார்.

முதலில் ஆடத்தொடங்கிய அவுஸ்ரேலிய அணியின் முதல் 4 விக்கெட்டுக்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் சரிந்தன. அதன் பின் வந்த மார்ட்டின், சைமன்ஸ், பிரட்ஹொக் மூவரும் நிதானமாக விளையாடி முறையே 38, 40,35 ஓட்டங்களைப் கூடுதலாகப் பெற்றனர். இறுதியில் அவுஸ்ரேலியா 50 ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.




சொய்சா

இலங்கை அணியின் சமிந்தவாஸ் நேற்றைய போட்டியில் விளையாடாதபோதும், நுவான் சொய்சா சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட் டுக்களையும், முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும், உபுல்சந்தன ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்டவீரர்களான மாவன் அத்தப்பத்து ஓட்டமெதுவும் பெறாமலும் சனத் ஜெயசூரிய 13 ஓட்டங்களுடனும் அட்டமிழந்தனர்.

இதன்பின் வந்த சங்ககார, ஜெயவர்த்தன இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இருந்தபோதும் அவுஸ்ரேலிய அணிவீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் விக்கெட்டுக்கள் விழத் தொடங்கின.

இருந்தபோதும், ரஸல்ஆர்னல்டுடன் 8 ஆவது விக்கெட்டுக்காக ஜோடிசேர்ந்த நுவான் சொய்சா சிறப்பாக விளையாடி இலங்கை அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

8 ஆவது விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும்பெற்ற 66 ஓட்டங்களே இலங்கை அணி சார்பில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெற்ற கூடுதலான ஓட்டங்களாகும்.

இலங்கை அணிசார்பில் நுவான் சொய்சா ரஸல் ஆர்னல்ட் இருவரும் ஆட்டமிழககாமல் முறையே 47, 23 சங்ககார 37 ஜெயவர்த்தன 21 ஜெயந்த 23 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக நுவான் சொய்சாவும், தொடரின் சிறந்த ஆட்டக்காரராக அன்றூ சைமன்சும் தெரிவாகினர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்ரேலியா 3:2 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் எதிர்வரும் எட்டாம் திகதி காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

## 9 வயதுக்குட்பட்ட

# மேசைப்பந்தாட்ட அணிகள் தெரிவு செய்யப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான வயதுக்கட்டுப்பாடு, சிறந்த ஆண், பெண் அணிகள் தெரிவு இடம் பெற்றதுடன் முதல் நிலை வீரர்கள் மூவர் இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தில் தேசிய தெரிவு நிலை குழாம் பயிற்சிக்கு என அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அணித் தெரிவுகள் யாவும் யாழ்.மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் இடம் பெற்றது. மேசைப் பந்தாட்ட சங்க செயலாளர் ஜே.மோகனின் மேற்பார்வையின் கீழ் இத்தெரிவுகள் இடம்பெற்றது.

இம்முறை விசேட அணியாக 9 வயதுக்குட்டபட்ட ஆண், பெண் அணிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் இவர்களுக்கான விசேட பயிற்சிகள் ஞாயிறு மாலை 3.00 மணி தொடக்கம் மத்திய கல்லூரி உள்ளரங்கில் இடம் பெறுகிறது.

தெரிவு அணியில் புதிதாக தெரிவான 9 வயது ஆண், பெண் அணி விபரம் வருமாறு.

9 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி -

மோ. ஆகாஷ் - (மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை), ம.அபிசேக் - (மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை), தே.சுஜீதன் - (திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை)

பெண்கள் அணி-

ம.சங்கவி - (மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை), வி.கரோலன் - (திருக்குடும்ப கன் னியர்மடம்), ல.கஜனி - (திருக்குடும்ப கன் னியர்மடம்)

(205)

# விளையாட்டு

## வடமராட்சி வலய

# வலைப் பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது!

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பாந்தாட்டப் போட்டியில் அரையிறுதியாட்டமானது நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களுக்கான போட்டிகள் இன்று காலை 8மணிக்கு விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 1 ஆம், 2 ஆம், இடத்திற்கான போட்டியில் 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையும் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் மோதவுள்ளன.

3 ஆம், 4 ஆம் இடத்திற்கான போட்டியில் 15 வயதுப்பிரிவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து கம்பர்மலை இந்து தமிழ்க்கலவன் பாடசாலையும், 17 வயதுப் பிரிவில் சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையை எதிர்த்து விக்னேஸ்வராக் கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மோதவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு வரமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.வல்லிபுரம் அறிவித்துள்ளார். (12)

# உள்ளூர் கழகங்களுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டி

## பாடுமீன் கழகம் நடத்துகிறது

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் வீரவீராங்கனைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் உள்ளூர்கழகங்களுக்கிடையில் போட்டிகளை நடத்தவிருக்கிறது. அந்த வகையில் 7 பேர்கொண்ட உதைபந்தாட்டப் போட்டியை முதலில் இருபாலாருக்கும் இடையே நடத்த முன்வந்துள்ளது.

21 வயதுக்கு குறைந்தவர்கள், கூடியவர்கள் என இரு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட இருப்பதாக கழகச் செயலாளர் அ.பெனடிக்ற் ராதா தெரிவித்தார்.

பாடுமீன் கழகத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களே போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். அதற்கான பயிற்சிகள் தினமும் குருநகர் விளையாட்டு மைதானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (206)

# களஞ்சிய தொழிலாளர் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது

(நல்லூர்)

யாழ்ப்பாண மாநகரசபையின் ஊழியர் சங்கத்துக்கும், ஆணையாளருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, முக்கியமான அம்சங்களை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவிருந்த வட.பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த 14 ஆம் திகதி மாநகர சபை ஆணையாளருடன் பின்வரும் உடன்பாடுகள் பற்றி திருப்திகரமான முடிவுகள் எட்டப்பட்டதாகத் தெரிவித்தனர்.

சென்ற வருடம் மேற்கொள்ளப்பட்ட 4 நாள் வேலைநிறுத்தத்தில், ஊழியர்களுக்கான சம்பளததை வழங்குதல் - தற்காலிக தொழிலாளர்களை அரச தீர்மானத்தின்கீழ் அனுமதிபெற்று, விரைவில் நிரந்தரமாக்குதல் எனவும் - புதிதாக தொழிலாளர்களுக்கு அவ்வப் பகுதிகளில் சீருடை மாற்றும் நிலையங்கள் அமைத்தல்- அமைக்கப்பட்ட வற்றுக்கான நீர், மற்றும் பிற வசதிகளை பூர்த்திசெய்தல் -

முதன்மைபடுத்தப்பட்ட நிரந்தர தொழிலாளர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளைக் கடனடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு ஊழியர் சங்கத்தினூடாக ஏற்பாடு செய்தல் - சீருடைகளுக்கான தையல் கூலிகளை அதிகரித்தல்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்தி, அதனூடாக அனுமதியைப் பெறுதல்.

போன்ற முக்கிய விடயங்களை உடன் நிறைவேற்றுதல் எனவும், இது தொடர்பாக எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்பு, உடன் நிறைவேற்ற உத்தர விட்டுள்ளதாக ஆணையாளர் உறுதிமொழி அளித்துள்ளதாக ஊழியர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர.(205)



சாவகச்சேரி - நுணாவில் சர்வசாதன சங்க சனசமூக நிலைய திறப்பு விழாவில் கலந்துகொண்ட - சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ. சரவணபவ உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (29)

# எழுவைதீவு பிரதேசத்திற்கு மின் வழங்க நடவடிக்கை

எழுவைதீவு பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையினரால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் முன்பு நாடடப்பட்டிருந்த மின்கம்பங்கள் அனைத்திற்கும் தற்போது மின்கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் நடுப்பகுதியில் மின்விநியோகம் இடம்பெறும் என்றும், அதற்குறிய மின்பிறப்பாக்கி வெகுவிரைவில் பொருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடல் கடந்த தீவுகளில் மின்சார வசதியற்ற தீவாகத் தற்பொழுது எழுவைதீவு மட்டுமே உள்ளமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (83)

# யாழ்—குறிக்காட்டுவான் வரையான கடற்படை முகாம்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்திலிருந்து குறிக்காட்டுவான் துறைமுகம் வரையான பிரதான வீதியிலுள்ள கடற்படை முகாம்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டு, புதிய முட்கம்பி வேலிகளும், முட்கம்பிச் சுருள்களும் போடப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டி, மண்கும்பான், சாட்டி, வேலணை, துறையூர், குறிகாட்டுவன் நடுத்துருத்தி மற்றும் குறிக்காட்டுவான் துறைமுகப் பகுதி ஆகியவற்றிலுள்ள முகாம்கள் - புதிய மண் அணைகள் அமைக்கப்பட்டதுடன், சோதனை நிலையம் என எழுதப்பட்ட வாசகப் பலகைகள், வீதித் தடைகள் என்பன புதுப்பிக்கப்பட்டு இருப்பதனால் - பயணிகள், மக்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வை ஏற படுத்தியுள்ளது.

இதேவேளை, குறிக்காட்டுவான் துறைமுக நுழைவாயிற் பகுதியில் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், வீதி மறிப்பு கேற்றும் போடப்பட்டுள்ளது.

குறிக்காட்டுவான் நடுத்துருத்திப் பகுதியிலுள்ள முகாமைச் சுற்றி தற்போதுதான் புதிதாக முற்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாடு தேர்தலை நோக்கிச் செல்லும் வேளையில், கடற்படையினரின் இந்தப் புதிய செயற்பாடுகள் - மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற படுத்தியுள்ளது. (113)

## ஏகாதசி விரத பூசை

(கொக்குவில்)

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான ஏகாதசி விரத பூசை - நாளை செவ்வாய்க்கிழமையும், மாசிமகத் திருவிழா 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சுவாமி திருவீதி வலம் வரும் நிகழ்வு நடைபெறும. (206)

## வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதியில்

# மண்ணை மீளக்கொட்டுவதாயின் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி

வெடிபொருள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளில் மீண்டும் மண்ணைக் கொட்டுவதற்கு வீட்டு உரிமையாளர்கள் எம்முடன் தொடர்புகொள்ள வேண்டும் என - யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் செயற்பாட்டு அலுவலர் எல்மோ ஆனந்தராஜா தெரிவித்தார்.

வெடிபொருள் அகற்றுவதற்காக மண் அள்ளப்பட்ட இடங்களில் பாரிய குழிகள் இருப்பதால், மழைபெய்யுமானால் நீர் தேங்க வாய்ப்பிருப்பது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது -

வெடிபொருட்களை அகற்றுவதற்காக மண் அள்ளப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் எம்முடன் தொடரபு கொண்டால், அந்தந்த வீடுகளில் மீணடும் மண்ணைப் போடுவதற்கு வழிசெய்யமுடியும்.

வெடிபொருட்கள் அகற்றுவதற்கு மூன்று முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

அதாவது மோப்பநாய்கள் மூலம் வெடிபொருட்களை இனம்கண்டு அகற்றுதல், வெடிபொருட்கள் அகற்றும் பிரிவினர்மூலம் வெடிபொருட்கள் அகற்றுதல், இயந்திரங்கள் மூலமாக வெடிபொருட்கள் அகற்றுதல் ஆகியனவே அவையாகும்.

கட்டடங்கள் அதிகமாகவுள்ள பகுதிகளில் இயந்திரங்கள்மூலம் மண், கட்டடம் என்பன அகற்றப்பட்டு, அவை வெடிபொருட்கள் அகற்றுவதற்காக அரைக்கப்படுகின்றது.

கட்டடங்கள் அகற்றப்பட்டு, வெடிபொருட்கள் அகற்றப்படுவது தவிர்க்க முடியாததது. அதனை அறிந்தும், ஒருவர் தனது வீடு இடிக்கப்பட்டதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். வெடிபொருள் அகற்றப்படாமல் எந்தவொரு பகுதியிலும் மக்களைக் குடியமர்த்துவது முடியாதகாரியம்.

வெடிபொருட்கள் உள்ளதாகக் குறிபபிடப்படும் இடங்களில் மக்கள் மீளக்குடியேறவேண்டுமானால், நிச்சயமாக வெடிபொருட்கள் அகற்றப்படல்வேண்டும். அதனைப் புரிந்து கொண்டு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)




பெயர் : ந.நிரூஜன்
முகவரி : கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

# அரியாலை நெடுங்குளம் பகுதியில் சட்டவிரோத செயல்கள் அதிகரிப்பு

அரியாலை - நெடுங்குளம் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு, கசிப்பு உற்பத்தி மற்றும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

இந்த பகுதியில் தினமும் சட்டவிரோதமாக மண் அகழப்பட்டு உழவு இயந்திரங்களின்மூலம் கடத்தப்படுவதால், கடல் நீர் அந்தப் பகுதிக்குச் செல்லும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும், அத்துடன் சட்டவிரோதமாகச் சில இடங்களில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதால், அங்கு அதனைப் பருக வருபவர்களினால் பெரும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் மக்கள் எதிர்நோக்கிவருகின்றனர. இவற்றைக் கட்டுப்படுத்த முன்னர் பொலிஸார் கசிப்பு உற்பத்தி யாளர்களைக் கைது செய்திருந்தும், அவர்கள் மீண்டும் கசிப்பு உற்பத்தி செய்வதாகவும் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் தினமும் தொடர்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் பலர் கவலை தெரிவித்தனர்.(55)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் - கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலையில் நடாத்தப்படும் சிறுவர் முன்பள்ளி மாணவர்களுக்கு - கொப்பி, பென்சில், கலர் சோக்கட்டிகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர், செயலாளர், பிராந்திய தலைவர், கந்தரோடை கிராம அலுவலர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (101)

## வாடகை வான் பிரசாரத்தில்

ஈ.பி.டி.பியினரிடமுள்ள தனது வாகனத்தை மீட்டுத்தருமாறு உரிமையாளர் ஒருவரால் - யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேறு தேவைக்கு எனத் தெரிவித்து தனது ஹையஸ்வானை வாடகைக்கு அமர்த்திச் சென்ற ஈ.பி.டி.பியினர் - ஸ்ரான்லி வீதி தலைமையகத்திற்கு எடுத்துச் சென்று, தறபோது தேர்தல் வேலைகளுக்குப் பயன்படுத்தி வருவதால், இதனை அவர்களிடமிருந்து மீட்டுத் தரக்கோரியே பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (111)

## மரக்கன்றுகள் விநியோகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியேறிய மக்களுக்கு, பயன்தரு மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

பொருண்மிய மேம்பாட்டு பிரிவினரின் அனுசரணையோடு, தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையினர் - தோடை, பலா, எலுமிச்சை ஆகிய பயன்தரு மரக்கன்றுகளைப் பொதுமக்களுக்கு விநியோகித்தனர்.

கல்வயல் - புலுட்டயன் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தென்மராட்சி எழுச்சி பேரவை செயலர் க.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் ந.ரவிராஜ், யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், மாணவர் பேரவையைச் சேர்ந்த புவனா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## தொழில்நுட்ப நிறுவன பொதுக் கூட்டம்

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பொதுக்கூட்டம் - நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.30 மணிகபு நிறுவன கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து கற்கைநெறிகளைப் பயில்வோரையும், பகல்நேர, மாலைநேர மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(25)

## பஸ்தரிப்பு நிலையம் இடம்மாற்ற ஏற்பாடு

மருதனார்மடத்தில் இராமநாதன் பாடசாலைக்கு முன்பாக நீண்ட காலமாக அமைந்திருந்த பஸ்தரிப்பு நிலையத்தை - தற்போது பெற்றோல் நிரப்பு நிலையத்தின் அருகில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பாடசாலை முன்பாகவுள்ளதால், மாணவர்களின் போக்குவரத்துக்கு நெருக்கடியாக உள்ளதனாலேயே இது இடம் மாற்றப்படவுள்ளது. (101)

## எழுவைதீவில் கட்டாயக் கல்விக்குழு அமைப்பு

எழுவைதீவு முருகவேல் வித்தியாலய சூழலில் - பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீளச்சேர்க்கும் நோக்குடனும், பெற்றோர் மத்தியில் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் - பாடசாலையில் கட்டாயக் கல்விக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழு - பாடசாலை மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் மாதம் ஒரு முறை சந்தித்து, கற்றல்சார் செயற்பாட்டின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்தக் கட்டாயக் கல்விக் குழுவில் கல்லூரி அதிபர், சிரேஷ்ட ஆசிரியர், கிராம சேவகர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (83)

## திருக்குறள் மனனப்போட்டி

(உடுவில்)

உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படவுள்ள திருக்குறள் மனனப்போட்டி - மார்ச் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் பாடசாலையில் நடைபெறவுள்ளதாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் அறிவித்தார். (101)

## மகாபொல கொடுப்பனவை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்விபயிலும் முதலாம் வருட மாணவர்கள் தவிர்ந்த, ஏனைய மகாபொல கொடுப்பனவினைப் பெறும் மாணவர்கள் அனைவரும்- கொடுப்பனவை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறு நிறுவன இயக்குநர் இராஜரட்ணம் தெரிவித்தார்.

அத்துடன், முதலாம் வருட பகல்நேர மாணவர்கள் அனைவரும் தமது மகாபொல கொடுப்பனவிற்கான விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து அலுவலகத்தில் வழங்குமாறும் நிறுவன இயக்குநர் மேலும் தெரிவித்தார்.



# கலாசரம்

# எழுச்சி


றியோ கிறீம் ஹவுஸ் தனக்கேயுரிய மிடுக்குடன் நிமிர்ந்து நிற்கிறது. அதன் முன்னே இருபதிற்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் அரட்டை அடித்தவாறு சுகந்தியின் வரவிற்காய் காத்திருக்கின்றனர். இண்டைக்கென்ன விஷேசம் சுகந்தி **Party** வைக்கிறாள், ஒருத்தி ஆவலோடு கேட்கிறாள். அது சுகந்தியின்ரை அண்ணாவுக்கு இண்டைக்கு **Birth Day** யாம். அதுதான், ஓ! அப்ப இண்டைக்கு பெரிய பம்பல் தான். நேரமாகுது இன்னும் சுகந்தியைக் காணேல? மற்றவள் அவசரத்தோடு அங்கு மிங்கும் பார்க்கிறாள்.

பீப்பீ.... பீப்.. கோணடித்தவாறு சுகந்தியின் மோட்டார் சயிக்கிள் வந்துநிற்கிறது. சுகந்தி வாயெல்லாம் பல்லாக மோட்டார் சயிக்கிளிலிருந்து இறங்கி, அவர்களை நோக்கிப் போகிறார். ஒருவித பணக்காரதத் தனத்தை அவளது நடை, உடை பறைசாற்றிக்கொண்டிருந்தது. யாவரும் உள்ளே போகின்றனர். அளவான சத்தத்தில் ஏதோ ஒரு பாடல் கேட்கிறது. குளிரூட்டப்பட்ட அந்தக் கடையின் உள்ளே யாவரும் உற்சாகத்தோடு அமர்ந்திருக்கின்றனர். சிரிப்பும் கும்மாளமுமாய் விருந்துபசாரம் ஆரம்பமாகிறது.

நேரம் காலை 8 மணி ரொறன்ரோ நகரம் பனியின் ஆதிக்கத்தில் உறைந்து போயிருந்தது. பனிக்கட்டிகளில் பட்டுத்தெறித்த மின்விளக்கு ஒளிகள் மாயாயாலம் காட்டிக் கொண்டிருந்தன. குளிரோடு போட்டிபோட்டு அவசரமாய் இயங்கிக் கொண்டிருக்கும் வாகனங்களின் போக்குவரத்து.

தேவன் வேலைமுடிந்து வந்து தன் அறைக்கதவைத் திறக்கிறான். விறைத்துப்போன அவன் கைகள் சடுதியாய் செயற்பட மறுக்கின்றன. அவன் முகத்தில் சோர்வு, கண்களை செருகி இழுக்கும் தூக்கம். அறைக்குள் ஒழுங்கற்றுக் கிடக்கும் பொருட்கள் அவன் முகத்தைப்போல காணப்பட்டன. சுவரிலே மாட்டப்பட்டிருந்த கலண்டரில் விவேகானந்தர் புன்னகைத்தபடி தெரிகிறார். அவன் ஒருவித உற்சாகத்தோடு கலண்டர் ஒற்றையைக் கிழிக்கிறான் **August** 10 ஓ..... இண்டைக்கென்ரை பிறந்தநாள், அவன் வாய் அவனை அறியாமல் முணுமுணுக்கிறது. எரிச்சலுடன் ஒற்றையைக் கசக்கி உரிய இடத்தில் போடுகிறான். பசி வயிற்றைக் கிள்ளுவதுபோல் உணர்வு. நான்கு நாட்களுக்கு முன் சமைத்த அதே உணவு மரத்துப்போன அந்த நாக்குகள் விறைத்துப்போய் குளிர்சாதனப் பெட்டிக்குள் இருக்கும் அந்த உணவை சாப்பிட மறுத்தன. இருப்பினும் சூடாக்கி ஏதோ சாட்டுக்கு மென்று விழுங்கினான். இரவிரவாக ஓய்வின்றி உழைத்த அலுப்பு. அவன் கட்டிலில் சரிகிறான்.

தேவனுக்கு இன்று முப்பத்தி ஏழு வயது வழுக்கையை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் தலை, காதோரம் பல்லிழித்துக் கொண்டிருக்கும் ஒரு சில நரைமயிர்கள் அவன் வாலிபத்தை விழுங்கிக்கொண்டிருந்தது. அவன் இந்த இயந்திர உலகிற்கு வந்து பதின்மூன்று வருடங்களாகிவிட்டன. அன்றிலிருந்து நித்திரை, நின்மதி என்பன வெல்லாம் அவனைப்பார்த்து கைதட்டிச் சிரிக்கின்றன. எங்கிருந்தோ வந்த எறிகணைக்கு இலக்காகிப்போன அப்பா, ஒன்றன் பின் ஒன்றாய் உள்ள சகோதரிகள் நால்வரையும், தாயாரையும் காப்பாற்றவேண்டிய கடமை தேவனின் தலையில் பாறாங்கல்லாய் கனத்துக் கொண்டு....




டிறிங்... டிறிங்... **T.P.** மணி அடிக்கிறது. தேவன் மாறாத சோர்வுடன் எழுந்து சென்று **T.P.** ஐ எடுக்கிறான். ஹலோ! மறுமுனையில் தொடர்பு கிடைக்கிறது. தம்பி தேவன் நான் அம்மா கதைக்கிறன். இண்டைக்குன்ரை பிறந்த நாளெல்லே பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்துபோட்டுவாறன். அதுதான்... எப்பிடியப்பு உன்ரை சுகம். எனக்கென்னமோ நான் நல்லாயிருக்கிறன். பழைய பல்லவியாய் ஒப்புவிக்கிறான். உங்கை எல்லாரும் எப்பிடி? எல்லாரும் நல்ல சுகம். அதுசரி தம்பி தேவன் சாமினிக்கு ஒரு இடத்தில சம்பந்தம் சரிவந்திட்டுது. பொடியன் **Bank** இலை வேலை. 20 இலட்சமும், வீடு வளவும் கேட்கினம். அதுதான் உன்னை ஒருக்காக் கேப்பம் எண்டு.

அம்மா! இவ்வளவு காசுக்கு நான் இப்ப எங்க போறது. இரண்டு மாதத்தில நான் வாறனெல்லே. என்னோட இருக்கிற சிநேகிதப் பெடியன் ஒருத்தனும் வாறான். அவனுக்கு சாமினியை செய்வம் என்டெல்லே சொன்ன நான். தம்பி அவள் வெளிநாட்டு மாப்பிளை வேண்டாமாம். இந்த மாப்பிளையைத் தான் கட்டப்போறன் எண்டு ஒற்றைக் காலில நிற்கிறாள். தாயார் இழுக்கிறாள்.

அம்மா அக்கான்ர கலியாண வீட்டுக்கே பட்டகடனே இன்னும் அடைக்கேல்ல. அதுக்கிடையில இவளவு காசெண்டால் என்ன செய்யிறது. உங்கை **Bank** இலை எவ்வளவு கிடக்கு. அதுதம்பி இளையவள் சுகந்தி கொம்பியூட்டர் படிக்கப் போறவள். இப்ப பெட்டையள் எல்லாம் மோட்டார் சையிக்கிலில தான் திரியிறாளவை எண்டு ஆசைப்பட்டாப் போல ஒரு மோட்டச் சயிக்கிலும் வேண்டிக்குடுத்து, வீட்டுக்கு சுத்துமதிலும் கட்டிப் போட்டன். இப்ப செலவுக்கே தட்டுப்பாடு. இந்த நிலையில நீ ஊருக்கு வந்து என்ன செய்யப் போறாய். ஏதோ பிறகு எடுத்து உன்ரை முடிவைச்சொல்லு. தாயார் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறாள். அம்மா மாமாவை எப்பிடி... ம்... அவையளுக்கென்ன வானதிக்கும் சம்பந்தம் சரிவந்திட்டுது. வெளிநாட்டு மாப்பிள்ளைதானாம். தேவனின் காதுகள் இதற்கு மேல் எதையும் கேட்பதாக இல்லை. தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

தேவன் முகத்தை குத்தியவாறு கட்டிலில் கிடக்கிறான். அவன் எண்ணங்கள், கற்பனைகள் சீட்டுக் கோபுரமாய் சரிந்து கொண்டிருந்தன. அம்மா சொன்ன கடைசி வார்த்தை "வானதிக்கு சம்பந்தம் சரிவந்திட்டுது" திரும்பத்திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது.

வானதி அந்த நிலவைப் போன்ற அழகிய முகம் அவனுக்கு மட்டும் சொந்தம் என இன்றுவரை மனதுக்குள் போட்டு பூட்டி வைத்த ஆசை, ஊருக்குப் போனவுடனே அம்மாட்ட சொல்லி மாமாவோட கதைக்கச் சொல்லவேண்டும். வானதி எப்படியும் சம்மதிப்பாள். அவன் மனம் போட்ட கணக்கு பூச்சியத்தில் விடையளிக்கும் என, அவன் நினைத்திருக்க நியாயம் இல்லை. ஊருக்குப் போகும் நாட்களை எவ்வளவு ஆவலுடன் எண்ணிக்கொண்டிருந்தான். பழைய ஞாபகங்கள் நினைக்கும் போதெல்லாம் இனித்துக்கொண்டிருந்த அந்தப் பசுமையான இடங்கள் ஒன்றா, இரண்டா... தன் பழைய நண்பர்களுடன் சேர்ந்து கோயில் மடத்திலிருந்து அரட்டை அடித்த நாட்கள், கூத்துப் பார்க்கப் போய் கூக்காட்டிய நாட்கள், கந்தனின் தென்னங்காணிக்குள் கள்ள இளனி புடுங்கிய நாட்கள் பச்சைத் தரவையில் பட்டம்விட்ட நாட்கள், தலை சாய்ந்து நிற்கும் நெற்கதிர்களுடன் கதை பேசிய நாட்கள் அவன் ஆசைகள், எண்ணங்கள எல்லாம் குடும்பச்சுமைக்கு முன்னால் நிராசைகளாய் இவ்வளவு விரைவில் போகும் என அவன் மனதை ஏதோ இறுக்கிப் பிசைந்தது.



வானதியின் வண்ண முகமும், வாடிப்போன சாமினியின் முகமும் மாறிமாறி அவனை ரட்சிக்கிறது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் படுக்கையிலிருந்து எழுகிறான். நேரம் பத்து மணி என மணிக்கூடு அறைகூவல் விடுகிறது.

**செ.ஜமுனாராணி**

நிமிர்ந்து பார்க்கிறான். விவேகானந்தரின் மாறாத அதே புன்னகை முகம். அவன் மனதில் ஒருவித வேகம். உடைமாற்றி ஆயத்தம் ஆகிறான் அடுத்த நேர தன் வேலைக்காக. அவனுக்குத் தெரியும் தான் இப்படி உழைக்காவிட்டால் அம்மாவினதும், சகோதரிகளினதும் தேவைகளை நிறைவேற்ற முடியாது என்று.

---

# நெஞ்சை நெகிழவைக்கும் கவிதை வீச்சு

# வரதம்



கவிஞர் புதுவை இரத்தினதுரையின் தந்தையார் கந்தையா வரதலிங்கம் 'காலம்' ஆகிய நினைவுக்குத் தரப்பட்டது 'வரதம்' என்கின்ற - என்றும் போற்றிப்பாதுகாத்து வைக்கப்படவேண்டிய சுவடி. 'கால்பட்டுலவிய முற்றத்தில் சுவடுகளையும் நேற்று அழித்தாயிற்று. காற்றில் கலகலத்த பேச்சுவரம் இன்றில்லை. இனியுமில்லையெனினும், உண்மை அறைகிறது முகத்தில்' என்ற துயரம் இந்த ஏட்டின் பக்கங்கள் தோறினும் இருக்கின்றபோதிலும், இவை எல்லாவற்றையும் மறிக்கொண்டு, ஒற்றை மனிதனாய் வெளிச்சம் நல்கிய ஒப்பனை ஏதுமற்ற உண்மை முகத்துடன், பொய்யான போர்வை ஏதும் போர்க்காமல் கதை முடிந்துபோன ஒரு மனிதனின் ஆளுமை விகசித்து தெரிவதை இந்தப் பக்கங்களில் ஆழ்ந்து போகும் ஒவ்வொருவராலும் துல்லியமாக உணர்ந்துகொள்ளமுடியும்.

ஒரு மனிதனின் மறைவு எழுப்பும் துயரங்கள், பாசாங்கற்ற வார்த்தைகளில் வெளிவருகின்றபோது, எந்த மனிதனும் தனது வாழ்வின் இழப்பிலும் அதை உண்மையாக உணர்ந்து தன்னை அடையாளம் காணமுடியும். வரதமும் இத்தகைய உள்ளார்ந்த மன அருட்சியின் உணர்ச்சிக் குவியலாகவும், கவித்துவ வீச்சாகவும் தொனிக்கின்றது. இந்த 'வரதம்' செ.சட்டநாதர் என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளபோதிலும், பெரும்பாலான கவிதைகளில் புதுவை இரத்தினதுரையின் உன்னதமான கவித்துவம் குரலிடுவதைக் கேட்கமுடிகின்றது. தொகுதியில் ஆசை இராசையா, கருணாகரன் ஆகியோரின் கவிதைகளோடு, பஞ்சபுராணம், திருப்பள்ளி எழுச்சி, திருப்பொற்சுண்ணம், குடும்பத்தினர் ஏக்கம் என்பவற்றோடு, புதுவை இரத்தினதுரையின் 'அப்பு' சாவு பற்றிய சில விசாரணைகள், 'இந்தளவேதான் நான்', 'எடுத்து வருக' ஆகிய கவிதைகளைச் சேர்த்து வாசிக்கின்ற போது, சாவு பற்றிய ஏக்கம் என்பது கரைந்துபோய், வாழ்வின் உன்னதம் பற்றிய மனக்கசிவு ஏற்படுகின்றது. படிப்பவர் தன்னை மறந்துபோய், இன்னொரு எல்லைக்கு தன் சிந்தனைகளைக் கொண்டுசெல்ல இந்தக் கவிதை வரிகள் எல்லாம் கைநீட்டி அழைப்பதையும், மனம் நெகிழ்ந்து உருக வைப்பதையும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

'அப்பு' என்ற கவிதை புதுவை இரத்தினதுரையின் கண்ணீரில் பூத்த கவிதை. தந்தையோடான வாழ்வின் காலநதியை காளி வந்து அள்ளிக்கொண்டு போனதை ஒவ்வொரு எழுத்திலும் புதுவை தன்னை அறியாமல் தமிழாக்கி இருக்கிறார். தந்தையின் ஆளுமை, வடிவம், இயல்பு, ஆற்றல், மனித நேயம், கைத்திறன் உட்பட அவரது குரலையும் படிப்போர் மனதில் மானசீகத்தில் தோன்றவும், காதுகளில் கேட்கவும் தன் சொல் வளத்தால் சாத்தியமாக்கியிருக்கிறார் கவிஞர்.

எண்பது வயதுவரை வாழ்ந்த சாதாரண மனிதனின் ஆளுமைத்திறன் ஒரு கவிஞனால் அழகிய சிற்பமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது, கவிதையோடு ஒன்றியிருக்கின்றது. இழப்பைச் சந்திக்கின்ற நன்மனம்கொண்ட ஒரு மனிதனால் புதுவையின் கவிதையில் தன்னை அப்படியே அடையாளம் கண்டு ஒன்றிப் போகமுடியும். பாரதியின் சுயசரிதை எப்படி இன்றைக்கும் சொல் புதிது, பொருள் புதிதாய் உணரப்படுகிறதோ, அதுபோலவே புதுவையின் அப்புவின் கவிவரிகளும் இழப்பைச் சந்திக்கின்ற ஒவ்வொரு மனிதனது நெஞ்சுள் பிரவகிக்கின்ற நுட்பம் பொதிந்த கவித்துவமாக இருக்கும்.

'சாவு பற்றிய சில விசாரணைகள்' ஒரு மக்கள் கவிஞனின் நம்பிக்கைமிக்க வாக்குமூலமாக உள்ளது. விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி, பையஸ் அகமது பையஸ், பார்லோ நெருடா, பாரதி முதலியோர்- விடுதலைக் களத்தில் நின்று கவிதையைக் கைவாளாய் ஏந்தியவர்கள். சாவுக்குச் சவால்விட்டது போல புதுவை இரத்தினதுரையும் விடுதலைப் போராட்டத்தின் நடுவே நின்று "என் கவிதைகளால் எனக்கு சாவுமில்லை, காலன் நடந்துவரும் காலடி அரவம் என் காதருகே கேட்கவும் கலங்கேன் நான்" என்று உறுதியாகக் குரல் கொடுக்கிறார். இவை சத்தியமான வார்த்தைகள் என்பதைக் கவிஞரை அறிந்தவர்கள் அறிவர்.

இதுபோலவே 'காலனைத் தோழனாய் அழைத்து, நான் கூப்பிடும்போது என்னிடம் வா' என்று சொல்லும் கவிதையிலும் கவிஞனுக்கே உரிய கம்பீரமும், தமிழின் வலிமையும் ஒன்றிணைந்து கேட்கின்றது. இது அப்படியே இறப்பெனப்படுவது பிறப்பே என்ற கவிதையின் விசாரத்திலே ஏக்கப்பெருமூச்சோடும் உறுதியான குரலோடும் கேட்கும்.


'இந்தளவே தான் நான்' என்ற கவிதை தமிழில் வெளியாகியுள்ள சிறந்த கவிதைகளில் ஒன்று. எத்தனை முறை வாசித்தாலும் மனதினுள்ளே புதிய உணர்வையும், மானசீகத்தில் எண்ணற்ற காட்சிகளையும் விரியச்செய்யும் அற்புதமான சொற்சித்திரம் இந்தக் கவிதை.

"பொன்னாவரசும், என்வீட்டுப் பூவரசும் பூத்துச் சொரியும், கோடை வரும் எல்லாம் ஆடையிழந்து அலங்கோலமாகும். முதிர்ந்தவை உதிரும். புதிய தளிர்கள் பிறந்து பேசும். சிரிக்கும். என்னை எவரும் நினைவிருத்தமாட்டார்கள். வந்ததுக்கும், இருந்ததுக்கும், போனதுக்கும்கூட எந்தச் சுவடுமின்றி ' இவன் வாழ்வு' முடியும் எனக்குத் தெரியும், இந்தளவேதான் நான்" என்ற கடைசி வரிகள் வாசிப்பவரின் மனதில் புதுவை இரத்தினதுரை என்ற கவிஞனைப் பற்றிய எதிர்மாறான சிந்தனையைச் சட்டென்று தோற்றுவித்துவிடும். இதுவே ஒரு சிறந்த கவிஞனுக்குரிய அடையாளம் - என் பாடல்களைப் பாடி உரத்து வாசித்து எல்லோரும் இன்புற்றிருக்கக் கடவது" என்ற கவிஞனின் ஆசையில் அர்த்தமும் மெய்மையும் பொதிந்துள்ளது.

புதுவையின் கவிதைகளை உதிரியாகப் படிக்கின்றபோது ஏற்படும் ஏக்கத்தை இங்கே பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும். பாரதியின் அடிதொட்ட புதுவை இரத்தினதுரையின் முழுமையான கவிதைத்திறனை உணர்த்தும் ஒரு தொகுப்பு வெளியிடப்படுவதன்மூலம், இன்றைய தமிழ் ஒரு அருஞ்செல்வத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு எப்போது ஏற்படப்போகின்றது?

**செ.யோகநாதன்**

# உங்கள் நூலகத்திற்கு... புதிய வரவுகள்...




நூலின் பெயர் :-
பூகோளமயமாதல்
மூன்றாம் உலகப்பார்வை
நூலக ஆசிரியர்:-
சா.பி கிருபானந்தன்
வெயியீடு :-
கரித்தாஸ் (கியூடெக்)
யாழ்ப்பாணம் - 2003
பக்கம் :- 44
விலை :- 60/=
விடயம்:- பொருண்மியத்திட்டத்துடன் தொடர்புபடுத்தி அறிவியல் கண்ணோட்டத்துடன் பூகோளமயமாதல் பற்றிய பலத்த கேள்விகளின் தேடல் முயற்சியாக இந்நூல் அமைகிறது.



சஞ்சிகையின் பெயர்:-
அம்பலம்
(தனிச்சுற்றுக்காக)
வெளியீடு :- சைவப்பிரகாச
அச்சியந்திரசாலை,
2003 கார்த்திகை.
பக்கம் :- 32
விலை :- 20/=
விடயம்:- கவிதைகள், சிறு கதைகள், செய்திக்கட்டுரைகள் என்பன அடங்கும்.




இதழின் பெயர் :- தெரிதல்
ஆசிரியர் :- அ.யேசுராசா
வெளியீடு :- சுரபி பதிப்பகம்
மாசி - பங்குனி 2004
பக்கம் - 8
விலை - 5/=
விடயம் : இளைய தலை முறைக்கான கலை இலக்கியம் சார்ந்தது.

# சுயவிபரம்



கல்லின் இசை
கவிதையின் மழை
மழையின் கவிதை
அனைத்தின் விவாதமொழி
உன் இளமை!

பரபரப்பின் வெளிகடந்து
இரைதேடும் புறாக்களுக்கு
தானியங்கள்
இறைந்துகிடக்கும்
உன்பெயர்!

இருள் சிக்கி
விக்கும் உடுக்களுக்கு
தண்ணீர்
உன் முத்தம்!

ஆழிச் சங்கின்
ரீங்காரிப்பு
உன் அடிவயிற்றின் ஓங்காரம்!

தூரங்களைச்
சுருக்கிய காலம்
உன் காதல்!

பாரதி

# சேவல் தலை!

இலந்தைகள் உருளும் பாறைப்
பிஞ்சுகளின்
மழை தெறிக்கப் பார்த்த
கண்ணாடிப்
பழங்களுக்குள்
இறங்கும் கவுச்சிக்
கொடுவாள்.

மணல் விழுங்கிய மிச்சமாய்
மீன் முட்டைகள் உசுப்பேத்தி
முன்னேறும்,
முதல் வெள்ளை
நுரைகளாய் உடுப்புகள் பறக்க
இயங்கும்,
முதுகுப் பள்ளத்து வியர்வையில்
வந்து
விழும்
பறை குடித்து அருளாடிச்
சட்டெனத்
திருகியெறிந்த சேவல் தலையாய்
ஞாயிறு.



அழிச்சாட்டியக் காற்றில்
அகப்பட்டத்
திமிர்மரத்தின்
மதர்ப்புக் கொடூரத்திலிருந்து
எற்றிப் பறக்கும்
கடல்
உதறிய வானம்.

நிகழ்த்திய பழிகாற்று
நிகழ்ந்ததன்
வன்மம் வாங்கி
மல்லாந்து கிடக்கும்
மண்
கறும்புல் துளிர்க்க

- மதியழகன்

# ஞாபகமிருந்தால்...

வார்த்தைகள் கரைந்து
மௌனங்கள் பறிபோகும்
இந்தக் கணப்பொழுதில்
உந்தன் மௌனத்தை மட்டும்
எப்படி மொழிபெயர்ப்பேன்.....

உந்தன் விழியதில்
காதல் வழிகிறது
இது உனக்கும் புரிகிறது
எனக்கும் புரிகிறது
நம் உதடுகள் மட்டும்
இதைச் சொல்லாமல்
ஏன் உயிரிழக்கிறது ......



நம் சந்திப்பில்
காலம் மட்டும் காலமாகிறது
மௌனத்தின் ஆட்சியில்
எந்தன் நாட்குறிப்பு மட்டும்
தினமும் நனைகிறது.
உந்தன் நினைவு சொல்லும்
கவிதை மழையில் ....

தூக்கம் தொலைந்து
இமை விழி உருண்டு
தலையணை நனைக்கும்
எந்தன் கண்ணீர்த் துளிகளை
கொஞ்சம் கேட்டுப்பார்.
என் மனசின் ஓசையை
சத்தமாய் சொல்லும்.

- மானஸா

# தன்னைப்பற்றி!

ஒரு மரநிழலின் மணல் மேட்டில் உட்கார்ந்து கொண்டு ஆள் ஆளுக்கு கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

தச்சா சொன்னாள் - நான் காலையில் எழுந்திருக்க முதலே நான் படுத்திருக்கும் இடத்திற்கு எனது அம்மா தேனீர் கொண்டுவந்து தருவா. நான் அன்றாடம் உடுக்கும் துணிகள் எல்லாவற்றையும் அம்மாதான் தோய்த்துத்தருவா. குளிர் காலங்களில் சுடுதண்ணீர் வைத்து நான் குளிப்பதற்கு உதவியும் செய்வா.

பிரியா சொன்னாள் - மோட்டார் சைக்கிளில்தான் எனது அப்பா, நான் எங்கே போகவேண்டும் என்றாலும் கூட்டிச்சென்று விடுவார். ஒவ்வொரு நாளும் எனது செலவுக்காக ஐம்பது ரூபா தருவார். எந்த தப்புச் செய்தாலும் எனக்கு அடிக்கமாட்டார்.

அஞ்சலா சொன்னாள் - எனக்கு அப்பாவும், அம்மாவும் பயம். நான் அழுதால் காணும் அழவேண்டாம் என்று கெஞ்சுவார்கள். எது கேட்டாலும் வாங்கித் தருவார்கள். எனக்கு இரண்டு மாமாக்கள் இருக்கிறார்கள். மாறி மாறி என்னைக் கூட்டிக்கொண்டு திரிவார்கள்.

இப்படியாக எல்லோரும் தன் தன்னைப்பற்றி உயர்வாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதனை பவி தூரநின்று பார்த்துக்கொண்டிருந்தான். சுதா மட்டும் ஒன்றுமே கதைக்காமல் மணல் மேட்டிலே ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து எல்லோரும் எழுந்து சென்று போய் விட்டதும் ஓடிச்சென்று பார்த்தான் பவி. மணல் மேட்டில் என்ன எழுதி இருக்கிறாள் என்று. ஓ... சுதாவும் தன்னைப்பற்றி உயர்வாகத்தான் நினைத்திருக்கின்றாள். அதாவது தன்னுடைய பெயரை தரையில் எழுதியிருந்தாள்.

- செல்வா

# மனசு!



ஊடறுக்காமல் எந்த இடமும்
அனுமதித்து
காத்திருந்தது.
இருளில் ஒரு நாளும்
தேடவேயில்லை!

சூரியன் சுட்டெரித்தது
ஓரமாய் ஒரு நிமிடம்
ஆறுதலடைந்தது
ஒதுங்கிப் போனதாலா?...
ஒதுங்கிப் போகாததாலா?...

பெரிய உருவம் அல்ல,
சிறிய உருவத்திலும் மறைந்திருக்கும்.
எல்லோருக்கும் ஆறுதல்
கொடுக்கும்.
தானும் ஆறுதலடையும்!



விரைந்தோடி வேர்வரை
நனைய,
உதிராது மீண்டும் மீண்டும்
தளைத்தது.

வானம் பார்த்து வளரும்,
கோரமழையிலும்
புயல் காற்றிலும் முகம் காட்டி,
மேலே வளர்ந்து வானம்
மறைத்தது!

வளர்ந்த மரம்
மறைந்த சூரியன்
கல்லும் முள்ளும் நிறைந்த
பாறை இடுக்கிலும்
உட்புகுந்தது!

அடி மரம் பிடித்து
நுனிமரம் வரை ஏறி
முறிந்து விழும் ஒவ்வொருநாள்
இரவுத்தூக்கம்!



தூரம் தூரம் போகும்
போது
குறைந்து போகும் ஒளியின்
வெளிச்சம்,
நம் பார்வைக்கும்
அவ்வளவு தான்!

யார் யாரோ வந்து
அமர்ந்து செல்கின்றார்கள்,
எல்லோரின் மனதிலேயும்
தன் தன்னுடைய
எதிர்காலம்!

இன்றோடு அல்ல



நாளையுமல்ல நாளை
மறுநாளுமல்ல.
அதற்கு முதல் நாட்களும்
மறக்காதது!

ஓடும் பேருந்தில் தாவிப்
பாயும்.
தெருவொளியில் ஊர்
மனைகளின் வெளிச்சம் போல்
நடுத்தெருவில்
கள்ள இளநீர்
புடுங்கிக் குடிப்பதிலும்,
ஓரிரண்டு பேருக்குள் கதைக்கும்
வார்த்தைகளும்
ஒரு நாள் சண்டையில்
எல்லோரின் முன்னும்
வெளிக்காட்டி விடும்!

என்னிடம் பணம் இல்லை
யாரும் எதிர்பார்த்ததில்லை
என்னில் மவு!

செல்வம்

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XVII - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

இந்த இரண்டு நாடுகளும் - அகதிகளாக செல்பவர்களைச் சிறைகளில் அல்லது தடுப்பு முகாம்களில் பிடித்து அடைத்து விட்டுத்தான் அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்தன.



ஒருவருடைய அரசியல் தஞ்சக் கோரிக்கை மனு விசாரித்து முடிவதற்கு 2 வருடங்கள் ஆகுமென்றால், அவர் தொடர்ந்தும் அந்தச் சிறையில் அல்லது தடுப்பு முகாமில் அடைபட்டு கிடக்கவேண்டியே இருந்தது. அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் - மேன்முறையீடு செய்து, அதற்கான தீர்ப்பு வரும்வரை அந்த அடைபட்ட வாழ்க்கையை அகதிகள் வாழவேண்டியிருந்தது. மேன்முறையீடும் நிரகரிக்கப்பட்டு அதிகள் அந்தச் சிறையில் அல்லது தடுப்பு முகாம்களில் வைத்தே தயவு தாட்சண்யமின்றி திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் - கனடாவிலும்கூட அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் மாற்றுவழிகளைத் தேடிக் கொள்ள வாய்ப்பிருந்தன.

அவுஸ்ரேலியா - தனது நாட்டுக்குள் நுழைய முயலும் அகதிகளை அவர்கள் வரும் கப்பல்களுடன் சேர்த்து நடுக்கடலில் வைத்து சுற்றிவளைத்து அவர்களைத் தனித்தீவுகளில் சிறை வைத்த சம்பவங்களும் - அவுஸ்ரேலிய அகதிகள் தடுப்பு முகாம்களில் தங்களைச் சுதந்திரமாக வெளியில் விடும்படி அகதிகள் நடத்திய போராட்டங்கள் - அவற்றை அடக்குவதற்கு அவுஸ்ரேலிய பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் உலகின் கவனத்தை ஈர்த்த சம்பவங்களாக இருந்தன.

ஐ.நாவின் மனித உரிமை அமைப்புக்கள் உட்பட உலகெங்கும் இருக்கும் பெரும்பாலான அகதிகள் நலன்பேணும் அமைப்புக்கள் அவுஸ்ரேலிய அரசின் - அதிகளுக்கெதிரான போக்கைக் கடுமையான சாடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தனியன்களாக, உதிரிகளாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் - 'தமிழ் குடும்பம்' என்ற அமைப்பாகத் தங்களது இருப்பைப் புலம்பெயர்ந்த நாடுகளிலே உறுதிப்படுத்திய காலகட்டமாக 1985 - 1990 களைச் சொல்லலாம்.

புலம்பெயர்ந்த இளைஞர்களைப் பொறுத்தவரை - திருமணம் என்பது, அவர்களின் அவல வாழ்க்கையின் முக்கிய திருப்புமுனையாக அமைந்தாலும், இன்னொரு பக்கத்தில் ஒரு பாரிய கடன் சுமையையும் அது அவர்கள்மீது சுமத்தி விட்டதையும் மறுக்கமுடியாது.

சராசரியாக ஒவ்வொரு இளைஞனும் தனது திருமணத்துக்காக 30 ஆயிரம் பிரெஞ் பிராங் அல்லது 10 ஆயிரம் டொச் மார்க் அல்லது 8 ஆயிரம் சுவிஸ் பிராங் வரையில் செலவுசெய்யவேண்டியிருந்தது.

இந்தியாவுக்கோ, தாய்லாந்துக்கோ அல்லது சிங்கப்பூருக்கோ சென்று திருமணம் செய்தவர்களும் சரி, பிரயாண முகவர்களுக்குப் பணம் கட்டிப் பெண்ணைக் கூப்பிட்டவர்களும் சரி, அடிப்படையில் இவ்வளவு செலவைச் செய்யவேண்டியவர்களாகவே இருந்தார்கள்.

நமது பெண்களைப் பொறுத்தவரையிலும், இந்தத் திருமண ஏற்பாடுகள்தான், அவர்களின் மேற்குலகப் புலப்பெயர்வுக்கான ஆரம்பமாக இருந்தது.

அந்தக் காலகட்டத்தில் ஆண்களைப்போல 'தனியன்களாக' பெண்கள் எவரும் புலம்பெயர்ந்து செல்லமுற்படவில்லை.

> **இங்கே தாயகத்தில் அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவுகள், சொந்த பந்தங்கள் என்று ஒரு பரந்த உறவு வட்டத்துக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட நமது பெண்கள், அங்கே புலம் பெயர்ந்த நாடுகளில் 'கணவன்' என்ற ஒரு தனிமனிதனின் ஆதரவின்கீழ், தாங்கள் குடி யிருக்கும் வீடு என்ற நான்கு சுவர்களுக்குள் வாழும் நிர்ப்பந்தத்துக்குத் தவிர்க்கமுடியாமல் தள்ளப்பட்டார்கள்.**

தாயகத்தில் வீறுகொண்டெழுந்த விடுதலைப் போராட்டம் - நமது பெண்களுக்கான ஒரு புதிய பாதையை அவர்களது திறமையை நிரூபிக்கக்கூடிய ஒரு களத்தை ஏற்படுத்திக் கொடுத்த அதேநேரத்தில் - திருமணத்துக்கான புலப்பெயர்வு என்பது அவர்களை இன்னொரு தளத்துக்குத் தள்ளிவிட்டது.

அந்தக் காலகட்டத்தில் நடந்த புலம்பெயர்ந்த நாட்டு திருமணங்கள் - நிழல் படத்தையும் - தொலைபேசி உரையாடல்களையும் வைத்துத்தான் நிர்ணயம் செய்யப்பட்டன. தனக்கு வாழ்க்கைத் துணைவனாக வரக்கூடிய ஆணைப்பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பெண்களுக்கு மிகக்குறைவாகவே இருந்தது. வசதியான வாழ்க்கை இருக்கிறது, கார் இருக்கிறது, வீடு இருக்கிறது, அப்பிளும், திராட்சையும் வீட்டு முற்றத்தில் குவிந்துகிடக்கும். வாய்கொப்பளிப்பதே கொக்கோகோலாவிலும், பெப்சியிலும்தான் என்கின்ற மாதிரியான ஒரு 'சொகுசு வாழ்க்கை' பற்றிய சித்தரிப்புத்தான் நமது பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

திருமணமாகி ஒருவருடம் அல்லது இரண்டு வருடம் விசாவுக்காகக் காத்திருந்து அங்கு செல்லும் பெண்களுக்கும், பெரும் இடர்பாடுகளைத் தாண்டித் திருமணத்துக்காக அங்கே சென்று இறங்கும் பெண்களுக்கும் - அவர்கள் சென்று இறங்கிய 24 மணிநேரத்துக்குள் அல்லது 48 மணிநேரத்துக்குள் - சொகுசு வாழ்க்கை பற்றிய கனவு கலைந்துபோய் விடும்.

விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில பெண்களைத்தவிர பெரும்பாலான பெண்கள், தங்களுடன் ஆற அமர இருந்து ஆசை தீர கதைக்கக்கூட நேரமில்லாமல், பட்டகடனை அடைப்பதற்குப் படாதபாடுபட்டு உழைக்கும் கணவன்மாரின் அவல வாழ்க்கையைத்தான் காண்பார்கள் - கண்டிருக்கிறார்கள். எனவே, கனவுகள் கலைந்து, புறவுலகின் யதார்த்தம் இடிக்க, பொருளாதாரச் சுமை அழுத்த, இவர்களும் தவிர்க்கமுடியாதபடி வேலை செய்யும் நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஏறக்குறைய ஐந்து வருடங்கள்வரை கடுமையான, இறுக்கங்கள், கஷ்டங்கள் என்பவற்றைத் தாக்குப்பிடித்துத் தங்களது தேவைகள், ஆசைகள், அபிலாஷைகளை மட்டுப்படுத்தியே புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் - ஐரோப்பாவின் மாற்றுக் கலாசார, மாற்று மொழிச் சூழலில் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது.

இன்றைக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் இரண்டாவது தலைமுறையினராக வளர்ந்திருக்கும் பிள்ளைகளின் பிறப்பும் இந்தக் காலகட்டத்திலேதான் நிகழ்ந்தது. ஐரோப்பிய நாடுகளின் குடிவரவு திணைக்கள அதிகாரிகள்- இந்தக் காலகட்டத்தை (1985 - 1990) தமிழ் அகதிகளின் வருகையில் ஒரு பாய்ச்சல் நிகழ்ந்த காலகட்டம் என்று குறிப்பிடுவதுண்டு.

1985 இற்கும் 1990 இற்கும் இடைப்பட்ட காலத்தில் மட்டும் 3682 தமிழ்ப் பெண்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒருங்கிணைவு சட்டத்தின்கீழ் பிரான்ஸ்சுக்கு வந்ததாக 'RSAI' எனப்படும் அகதிகளுக்கான சமூக உதவி அமைப்பின் தகவல்களிலிருந்து அறியமுடிகிறது. பிரயாண முகவர்கள்மூலம் அங்கு சென்று திருமணம் செய்துகொண்ட பெண்களின் எண்ணிக்கை இதற்குள் அடங்காது.

1977 இலிருந்து 1987 வரை புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்களுக்கு எப்படி வாழ்க்கை சிக்கலானதாகவும், நெருக்கடி மிகுந்ததாகவும் இருந்ததோ, அப்படியே 1985 முதல் 1990 வரையிலான காலப்பகுதி புலம்பெயர்ந்த பெண்களுக்கு நெருக்கடிமிக்கதாக இருந்தது.

இங்கே தாயகத்தில் அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவுகள், சொந்தபந்தங்கள் என்று ஒரு பரந்த உறவு வட்டத்துக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட நமது பெண்கள், அங்கே புலம் பெயர்ந்த நாடுகளில் 'கணவன்' என்ற ஒரு தனிமனிதனின் ஆதரவின்கீழ், தாங்கள் குடியிருக்கும் வீடு என்ற நான்கு சுவர்களுக்குள் வாழும் நிர்ப்பந்தத்துக்குத் தவிர்க்கமுடியாமல் தள்ளப்பட்டார்கள்.

சுற்றுப்புறச் சூழல் என்பது அவர்களுக்கு அந்நியமானதாகவே இருந்தது. ஆண்கள் தங்களுக்குப் பழக்கமில்லாத மாற்றுமொழி, மாற்றுக் கலாசாரச் சூழலுடன் சமரசம் செய்துகொண்டு வாழப்பழகிக்கொண்டதைப்போல- நமது பெண்களால் சுலபமாக அந்த வாழ்க்கைச் சூழலுடன் சமரசம் செய்துகொள்ள முடியவில்லை.

அதைவிட குடும்பத்துக்குள் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டபோதும்கூட, அதை சொல்லி ஆறுதல் தேட அவர்களுக்கு வடிகால்கள் இருக்கவில்லை. இங்கே என்றால் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, தோழிகள் என்று தங்களது மனக்கஷடங்களைச் சொல்லி ஆறுதலடைவதற்கு அவர்களுக்கு நிறைய வழிகள் இருந்தன. அங்கே அவர்கள் தங்களுக்குள்ளேயே அவற்றைப் போட்டு மூடி வைத்து மன அழுத்தத்துக்குள்ளாகிறார்கள்.

கர்ப்பம் தரித்த காலத்திலும் அவர்களுக்கு கணவனைத்தவிர - உறவு, உதவிக்கென்று யாரும் இருக்கவில்லை. அதனால், தங்களது வேலையை உடல்நிலை இடங்கொடுக்காவிட்டாலும் தாங்களே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது.

மகப்பேற்றுக்காலத்திலும்கூட இதேநிலைமைதான். குழந்தை பிறந்து ஒரு வாரகாலத்தில் கணவன் வேலைக்குச் சென்றுவிட, தனியே இருந்து குழந்தையையும் கவனித்து வீட்டு வேலைகளையும் செய்யவேண்டிய நிலைக்குப் பெண்கள் தள்ளப்பட்டனர்.

பத்தியச் சாப்பாடு - மூலிகைக் குளியல் எல்லாம் அங்கே கிடையாது. கணவன் செய்து கொடுக்கும் சூப்பும், கோழி, மீன் சாப்பாடுகளும்தான் - பிரசவ கால பராமரிப்புகளாகும்.

அந்தக் காலகட்டத்தில் - 'அந்நியமாதல்' என்பது பெண்களுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது.

ஊரிலிருந்து...
உறவிலிருந்து....
மொழியிலிருந்து...
சமூகத்திலிருந்து...

இனத்திலிருந்து... என்று ஆரம்பித்த இந்த அந்நியமாதல் - பெண்கள் தங்களில் இருந்தே தங்களை அந்நியமாக்கிக்கொண்ட ஒரு தன்மையை உருவாக்கியது. இந்த அவலநிலையை 'செக்ட்' எனப்படும் சில அடிப்படைவாத மதக் குழுக்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நமது புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்ப அமைப்புக்குள் ஊடுருவின. *(தொடரும்)*

---

# மக்களின் குறைபாடுகளை தமது கூட்டணி நீக்குமாம்!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

சகல இனக்குழுக்களும் ஒற்றுமையுடன் வாழும் வகையில், நாட்டை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இலக்காகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் காலை சிறிதலதா மாளிகைக்குச் சென்று வழிபட்டபின்னர்- அஸ்கிரிய மகாநாயக்கரைத் தரிசித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பொருளாதார அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை, வேலைவாய்ப்புக்கள் குறைந்துள்ளன, உள்ளூர் கைத்தொழிலாளர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

சமுர்த்தி நன்மைகளும் குறைக்கப்பட்டுள்ளன. இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாராக இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ மகாநாயக்கரிடம் தெரிவித்தார்.

# புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு; திட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்!

## சுதந்திர முன்னணியிடம் பிரதமர் கோரிக்கை

நிபந்தனைகள் இன்றித் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதானால், அது குறித்த திட்டங்களை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

விறகாபொலவில் நடந்த தேர்தல பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே பிரதமர் ரணில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்காலத்தில் அரசியல் தீர்வொன்றைக் காணும் பொருட்டு ஐக்கிய இலங்கைக்குள் நிபந்தனைகளுடன் கூடிய சமஷ்டி ஆட்சியொன்றைப் பெற்றுகொடுக்க எமது கட்சி நடவடிக்கை எடுக்கும்.

நிபந்தனைகளுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது மீண்டும் ஒரு யுத்தத்துக்குச் செல்வதாக அமையும். அவ்வாறு செயற்படும்போது, சமாதான உடன்படிக்கை செயலற்றுப் போகுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# பிரதமர் நாட்டு மக்களை குழப்புவதில் ஈடுபட்டுள்ளார்

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

மீண்டும் ஒரு யுத்தத்தில் ஈடுபடப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்த நிலையில் தாம் ஆட்சிக்கு வராவிட்டால் யுத்தம் ஏற்படும் என, பிரதமர் கூறிவருவது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அநுரா பண்டாரநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்மூலம் நாட்டுமக்களைப் பீதிக்குள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு குறுகிய நோக்கம் உள்ளது. எந்தக் காரணம் கொண்டும் யுத்தத்திற்குச் செல்லப்போவதில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்த நிலையில் அவர்களுக்கு யுத்தம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும் நடவடிக்கையை பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளமை அவரது அறிக்கையிலிருந்து உறுதியாகத் தெரிகின்றது.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக வேண்டும் என்பதில் பொதுமக்கள் சாதுரியமாகவும், நியாயமாகவும் செயற்படுகின்றனர். இதனால், ஐக்கிய தேசிய கட்சியின் திட்டங்களை மக்கள் முறியடிப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் விதிமுறைகள் பற்றி வேட்பாளர்களுக்கு விளக்கம்!

(கொழும்பு)

தேர்தலின்போது நடந்துகொள்ளும் முறை தொடர்பாக வேட்பாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வு, நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் முதலாவது நிகழ்வு கல்கிசை பொலிஸ் நிலையத்தில் நடத்தப்பட்டது. இதில், 200 வேட்பாளர்கள் பங்குபற்றினர். இவர்களுக்குத் தேர்தலில் நடந்துகொள்ளும் முறை, அது தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் பற்றிப் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது.

அதன்போது வேட்பாளர்கள் தேர்தல் நியதிகளை மீறினால் அதற்கான தண்டனைகளும் பொலிஸாரால் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கூட்டமைப்பு வேட்பாளர் இலக்கங்கள் அறிவிப்பு!

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழத்தேசிய கூட்டமைப்பினரின் வேட்பாளர் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சாகுல் ஹமீத் 1, சம்பந்தன் 2, ரகுநாதன் 3, துரைரட்ணசிங்கம் 4, விக்னேஸ்வரன் 5, சதா சண்முகநாதன் 6, கௌரி முகுந்தன் 7 என்ற அடிப்படையில் வேட்பாளர் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்*
*செப்பவும் நாணும் ஒருங்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தென்பகுதி அரசியல் தலைமைகளின் போலி 'சமாதான' பிரசார ஓலங்கள்...!

பொதுத்தேர்தலுக்கு இன்னும் சரியாக ஒரு மாதமே உள்ளது. வேட்பாளர்கள் வாக்காளர்களை நோக்கி வாக்குவேட்டைக்குத் தயாராகிவிட்டார்கள்.

பிரசார நடவடிக்கைகள் தீவிரம்கொள்ளத் தொடங்கி விட்டன. தென்பகுதியில் வழமைபோன்று பிரதான இரு கட்சிகளும், அவைகளின் கூட்டணியினதும் தேர்தல் பிரசாரம் சமாதானத்தையும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையையும் மையங்கொண்டனவாகவே உள்ளன. இம்முறை தேர்தலில் தவிர்க்கமுடியாதபடி அனைத்து முக்கிய கட்சிகளும் தமது தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையில் இனப் பிரச்சினைக்கான தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதை முக்கிய கடமையாக கொள்ளவேண்டிய நிலைக்கு இன்றைய இலங்கையின் அரசியல் யதார்த்தம் அவைகளின் தலைமையைத் தள்ளிவிட்டுள்ளது என்பது உண்மைதான்.

ஏற்கனவே தென்னிலங்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவி வகித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த சமாதான முயற்சிகளின் காரணமாக அங்கு நிலவிய அமைதி நிலைக்கு தாமே காரணம் எனக் கூறும் அக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடரவும், நிரந்தர சமாதானம் ஏற்படவும் தமது கட்சி மீண்டும் ஆட்சிபீடத்தில் அமர்வதற்கான உரிமையை மக்கள் தரவேண்டுமெனவும் தவறி ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான எதிர்க்கட்சி ஆட்சிக்குவர நேரிடுமாயின் மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம் உருவாகுமென பிரசாரம் செய்துவருகிறார்.

கடந்த இரண்டு வருட சமாதானம் நாட்டை பொருளாதார ரீதியிலும் மேம்படுத்தியுள்ளதாகவும், இந்த அமைதி நிலை காரணமாக இலங்கைக்கு நிதி வழங்கும் சர்வதேச சமூகம் பெருமளவு நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளதாகவும், இந்தத் தேர்தலில் தமது அரசு மீண்டும் பதவிக்கு வராத பட்சத்தில் இந்த நிதியுதவி கிடைக்கப் போவதில்லை என்றும் இதனால் நாடு பெரும் அவலநிலைக்கு உள்ளாகும் என்றும் எச்சரித்து வருகிறார்.

இதேவேளை - ஆரம்பத்திலிருந்தே சமாதான முயற்சிகளை எதிர்த்தும் நிராகரித்தும் வந்த சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினர், மற்றொரு சமாதான எதிர்ப்பு சக்திகளாக ஜே.வி.பியுடன் இணைந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கி, தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள நிலையில் இதுவரை காலமும் பேரினவாத வெறியூட்டும், அமைதியைக் குழப்பும் கருத்துக்களையே முன்வைத்து தமிழ்மக்கள் உரிமைகள் தொடர்பான பிரச்சினையை வெளிப்படையாகவே நிராகரித்துவந்த இவர்கள் அனைவரும் இப்போது நாளுக்குநாள் தமது இனவெறி நாவை அடக்கி, சமாதானப் பாடலை இசைக்கத் தொடங்கியுள்ளமை அரசியல் அரங்கில் புதிய காட்சிகளாகியுள்ளது.

இதனைச் சாத்தான்கள் திடீரென வேதம் இசைக்க ஆரம்பித்த கதையாகவே கொள்ளவேண்டும்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர்கூட பச்சை இனவாதம் பேசி, புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் இனிமேல் செல்லுபடியாகாதென்றும் புதிய சமாதானப் பேச்சுக்கள் - புதிய நிபந்தனைகளுக்கு அமைய இந்த ஒப்பந்தங்கள் மீளாய்வுசெய்யப்பட்ட பின்னரே ஆரம்பிக்கப்படும் என்றும் இதற்கு நோர்வே போன்ற அரசியல் தரகர்களின் சேவை தேவைப்படாதென்றும் வெறித்தனமான ஆணவத்துடன் கூறிய சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டணியின் தொனி, வெகுவாக மாறிவருகிறது.

ஜே.வி.பி. சமாதான முயற்சிகள் குறித்து முன்னர் அலம்பியது போன்று இப்போது அலட்டுவதே இல்லை.

கதிர்காமர் எப்போதும் அளவுக்கு அதிகமாக அர்த்தமற்ற வகையில் பேசியும் அறிக்கைகளை விடுத்தும் எதிர்கால சமாதான முயற்சியானது புதிய கொள்கைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புதிதாக வடிவமைக்கப்பட்டு மேற்கொளளப்படும் என்றும் அதுவும் விடுதலைப் புலிகளுடன் ஏனைய தமிழ்க்குழுக்களையும் சேர்த்தே பேச்சுக்கள் நடத்தப்படும் என்று, கடந்த சில தினங்களுக்கு முன்புவரை பேசிவந்தார். எனினும், கடந்த இரண்டு தினங்களாக அவரது தொனியும் வெகுவாக இறங்கிவிட்டதென்றே கூற வேண்டும்.

சந்திரிகாவைப் போன்று அவரின் ஆலோசகரான கதிர்காமரும் விடுதலைப் புலிகளுடன் முரண்படும் குரலை ஒலிக்கத் தயங்குகிறார். அல்லது பின்வாங்குகிறார் என்றே கூற வேண்டும்.


இந்த மாற்றம் ஏன் ஏற்பட்டுள்ளதென்ற கேள்விக்கு விடை காண்பது ஒன்றும் கஷ்டமல்ல.

இன்றைய தேசிய மற்றும் சர்வதேசத்தின் அரசியல் யதார்த்தம் மற்றும் இலங்கை தொடர்பான அவற்றின் பார்வையும் அதன் விளைவான அழுத்தங்களும் அவர்களை அவ்வாறு செய்ய நிர்ப்பந்திக்கின்றது அவ்வளவுதான்.

இந்தவகையில் பார்க்கும்போது தென்பகுதி அரசியல் தலைமைகளின் சமாதானம் நோக்கிய அணுகுமுறை ஆத்மார்த்தமான ஒன்றல்ல என்பதும் அழுத்தங்களின் பாற்பட்ட ஒன்றே என்பது தெளிவு.

எனவேதான் தமிழ்மக்கள் தமது வாக்குகளை பதிவு செய்வதில் பொறுப்புடன் செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சமாதானம் பேசும் பேரினவாத சக்திகளின் போலிக் கருத்தூட்டல்களுக்கு மழுங்காது அவர்களை ஆதரிக்கும் சக்திகளை இனங்கண்டு புறக்கணிக்கும் உறுதியுடன் நடந்துகொள்வதன் மூலமே தமிழினத்தின் ஒருமைப்பாட்டை உலகிற்கு ஓங்கி உணர்த்த முடியும்.

## நாடும் நடப்பும்




# பிக்குகளுக்கு எதிரான பிரசாரத்தை நிறுத்துமாறு கதிர்காமருக்கு கடிதம்!

### ஜாதிக ஹெல உறுமய அனுப்பியது

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் பௌத்தபிக்குகள் போட்டியிடுவதற்கு எதிராக அரசாங்க தொடர்பு ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட பிரசாரங்களை உடனடியாக நிறுத்துமாறு ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் - ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் திலக் கருணாரட்ண - அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த வண.எல்லாவெல மேதானந்த தேரோ, வண.ஓமல்பே சோபித தேரோ, வண.உடுவே தம்மலேக தேரர் போன்ற பௌத்த பிக்குகள் அநீதிக்கு எதிராக முன்னிலைக்கு வருவது பொறுக்கமுடியாமல் அவர்கள் மீது அரச ஊடகங்கள் சேறுபூச முற்படுகின்றன.

இவ்வாறு பௌத்த பிக்குகள் மீது சேறுபூசும் நடவடிக்கைகளின் பின்னணியில் கிறிஸ்தவ அடிப்படைவாதிகள் இருக்கின்றனர். இவர்கள் தேர்தலில் பௌத்தபிக்குகள் போட்டியிடுவதன் காரணத்தினாலே இவ்வாறு பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு பங்கேற்கும் அரசில் நாம் அங்கம்வகிக்கப்போவதில்லை

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்காற்றக்கூடிய அரசாங்கம் ஒன்றில் தாம் ஒருபோதும் அங்கம் வகிக்கப் போவதில்லை என சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நீண்ட செவ்வியொன்றிலேயே, ரவூப் ஹக்கீம் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமக்கும் இடையில் பொதுவான உடன்பாடுகள் கிடையாது எனத் தெரிவித்துள்ள ரவூப் ஹக்கீம், முஸ்லிம்களது உரிமைகளையும், அபிலாசைகளையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அத்தகையவர்களுடன் இணைந்து ஆட்சியமைப்பது சாத்தியமற்ற ஒன்று.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் தமது கட்சி இணையக்கூடிய வாய்ப்பிருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்திகளையும் அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் தாம் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ரவூப் ஹக்கீம் - ஜனாதிபதி அண்மைக்காலமாக எடுத்துவரும் நடவடிக்கைகள் முழுச்சமாதான முயற்சிகளையும் பாதிக்கக் கூடியன என்றும், அத்துடன், ஜே.வி.பி.அங்கம் வகிக்கும் ஒரு கூட்டமைப்புக்குள் தாம் இடம்பெறுவது சாத்தியமற்ற ஒன்று என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் விதிமுறை கண்காணிப்பில் 1250 பொதுமக்கள் பணியில்!

தேர்தல் விதிமுறைகள் மீறப்படுவதைத் தடுப்பதற்கு, பொலிஸாருக்கு உதவுவதற்காக 1250 பொதுமக்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொது இடங்களில் சுவரொட்டி ஒட்டப்படுவது, தடைசெய்யப்பட்ட இடங்களில் கட்அவுட் கட்டப்படுவது போன்ற தேர்தல் மீறல்களைத் தடுப்பதற்கு நாடளாவிய ரீதியில் செயற்படவுள்ளனர்.

ஏற்கனவே இவ்வாறு 2 ஆயிரம் பேர் பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதற்கு தேர்தல் திணைக்களத்தால் ஒரு மாதகாலத்துக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முழுச்செலவுகளையும் தேர்தல் திணைக்களம் பொறுப்பேற்றிருக்கின்றது. மொத்தமாக 3250 பேர் இந்தப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்தலில் போட்டியிடவுள்ள

# கட்சிகளினதும் குழுக்களினதும் தலைவர்கள் தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கவுள்ளனர்

பொதுத் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளினதும், சுயேட்சைக் குழுக்களினதும் தலைவர்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இராஜகிரியவில் உள்ள மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இவ் விஷேட கூட்டத்தில் - சுதந்திரமும், நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்கு வேண்டிய ஆதரவினை தேர்தல் ஆணையாளர் கோருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முறை பொதுத் தேர்தலில் 24 அரசியல் கட்சிகளும், 192 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது மேற்கொள்ளப்படுகின்ற பிரசார நடவடிக்கைகள் உட்பட பல விடயங்கள் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்க தெரிவித்தார்.


இதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது குறித்து இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும், அடுத்த சில தினங்களில் இதற்கான முடிவுகளை தேர்தல் ஆணையாளர் எடுப்பார் என்றும அவர் கூறினார்.

சர்வதேச அரசியலில்...

- கே.ரீ.கணேசலிங்கம் -

# புதிய திருப்பங்களை உருவாக்கிவரும் ஹெயிட்டி அரசியல் நிலைமைகள்!

உலக அரசியலில் அதிக கவனத்தை ஈர்த்துவரும் ஹெயிட்டி விவகாரம் - மத்திய அமெரிக்க அரசியல் வரலாற்றை மீளத்தரிசிக்கும் விடயமாகவே உள்ளது. கரிபியன் தீவான ஹெய்ட்டி - கியூபாவுக்கும், டொமினிக்கன் குடியரசுக்கும் நடுவில் அமைந்திருக்கின்றது. அது மட்டுமன்றி, அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திற்கு மிக அண்மையில் ஆனால், அத்திலாந்திக் சமுத்திரத்தால் பிரிக்கப்பட்ட நாடாக ஹெயிட்டி உள்ளமை குறிப்பிடத்தக்க அரசியல் வரலாற்றுத் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது.



1804 ஆம் ஆண்டிலிருந்து பிரான்ஸ் குடியேற்ற நாடான ஹெயிட்டி, 1915 இற்குப் பின்னர் அமெரிக்க செல்வாக்கு நாடாக விளங்குகிறது. 1915 - 1924 வரை அமெரிக்காவின் நேரடி ஆட்சி ஹெயிட்டியில் நிலவியமையும், அதன் பின்பு மாறி மாறி இராணுவ சதிப் புரட்சிகளும் கிளர்ச்சிகளும் கொண்ட நாடாக அது விளங்குகின்றது.

மத்திய அமெரிக்க கண்டத்து நாடாகவும, அமெரிக்காவின் நேரடி செல்வாக்குக்குள் உட்பட்ட நாடாகவும் ஹெயிட்டி விளங்கிய போதும், பிரான்ஸின் செல்வாக்கும் ஆதிக்கமும் முற்றாகத் தளர்ந்துவிட்டதென்று கூறிவிடமுடியாது. தற்போதும் பிரான்ஸின் அனுசரணையும் உதவியும் ஹெயிட்டிக்கு உண்டு எனக் கூறலாம். 27, 750 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட ஹெயிட்டி, ஏறக்குறைய 6 மில்லியன் சனத்தொகையை உடைய நாடாகும். இதன் சனத்தொகையில் 95 சதவீதத்தினரும் கறுப்பர்கள் என்பது இன்னோர் சிறப்பம்சமாகவும், பிரான்ஸின் செல்வாக்குத் தொடர்வதற்கும் காரணமாவுள்ள அம்சமாகவும் அமைந்துள்ளது. மேலும், **Mulattos** என்று அழைக்கப்படும் ஐரோப்பிய இனப்பிரிவு காணப்படுவதுடன், அவர்களது அரசியல் செல்வாக்கு ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்திவந்தது. குறிப்பாக 1804 ஆம் ஆண்டுமுதல் 1946 ஆம் ஆண்டுவரை **Mulattos** என்ற ஐரோப்பிய இனப்பிரிவே அரசியல் தலைமையை தக்கவைத்திருந்தமையையும், 1947 ஆம் ஆண்டே முதலாவது கறுப்பின ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டதும் நினைவுகூரத்தக்கது.

ஹெயிட்டியின் மக்கள் தொகையில் 80 சதவீதமானவர்கள் றோமன் கத்தோலிக் மதப்பிரிவைச் சார்ந்தவர்களாக உள்ளனர். 1950 ஆம் ஆண்டுக்குப் பின்னான இராணுவத்திலும், அரசியல் அதிகாரத்திலும் செல்வாக்குடையவர்களாகவும், ஆட்சியை நிர்ணயிப்பவர்களாகவும் றோமன் கத்தோலிக்க தேவாலயங்களே விளங்கின. அத்தகைய தேவாலயங்களுடன் அமெரிக்க அரசியல் தலையீடும் ஹெயிட்டியின் அரசியலைத் தீர்மானிப்பதாக அமைந்திருந்தது. 1987 ஆம் ஆண்டு புதிய அரசியல் திட்டமொன்றை வரைந்த ஹெயிட்டி அரசாங்கம், அதன்படி 1988 ஆம் ஆண்டுகளில் ஒரு தேர்தலை நடாத்தியது.

ஆனால், தேர்தல் முடிந்த கையோடு ஏற்பட்ட இராணுவ சதிப்புரட்சியால், மீண்டும் பழையநிலைக்கு அந்த நாடு தள்ளப்பட்டது. மீண்டும் கலவரமும் வன்முறையும்- இறுதியில் 1990 டிசம்பரில் மீளவுமொரு தேர்தலுக்கு வழிவகுத்தது. அந்தத் தேர்தலில் றோமன் கத்தோலிக்க மதகுருவான ஜோன் பேட்ரண்ட் அரிஸ்டிக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு எதிரான கிளர்ச்சியொன்று 1994 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டபோது, அமெரிக்கா தனது இராணுவத்தினை நேரடியாக அனுப்பி அவரது ஆட்சியைப் பாதுகாத்ததுடன், அரிஸ்டிக் ஒரு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் எனக் குறிப்பிட்டு நியாயப்படுத்தியது.

இனி ஹெயிட்டி அரசியல் பற்றிய யதார்த்தத்தை பரிசீலிப்போம். கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியுள்ளது - ஏறக்குறைய ஹெயிட்டியின் தலைநகரத்தைத் தவிர, ஏனைய பிரதேசம் முழுவதும் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. போட் - ஒவ் - பிரின்ஸ்சும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. தலைநகரம் மற்றும் பிரதேசங்களிலுள்ள மக்கள் வேறு நாடுகளுக்கும், அயல்நாடுகளுக்கும் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி அரிஸ்டின் ஆட்சி முடிவுக்குவரும் தறுவாயில் இருப்பதாக ஊகங்கள் நிலவுகின்றது.

ஏற்கனவே, பல தடவை அதிபர் அரிஸ்டிக்கிற்கு ஆதரவாக இருந்த அமெரிக்காவும் தற்போது கைவிட்டிருப்பதுடன், அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொலின் பவலின் தகவல் அதனை வலியுறுத்துவதாக உள்ளது. இவ்வாறு அமெரிக்க ஆட்சியாளர்கள் நடந்துகொள்வது ஒன்றும் புதிய விடயமல்ல. அமெரிக்க ஆட்சியாளரின் ஆதரவும், உதவியும் தமது நலனைப் பாதுகாக்கும்வரையில் மட்டுமே தப்பிப் பிழைக்கும். அமெரிக்காவின் நலன் எங்கு யாரிடம் குவிந்திருக்கின்றதோ அங்கே தமது ஆதரவை அளிப்பதே அமெரிக்க ஆட்சியாளர்களின் பாணியாகும். இத்தகைய பாணியை அமெரிக்கர்கள் ஈரானில் அயதுல்லாக் கொமேனியின் புரட்சியிலிருந்தே கற்றுக்கொண்டனர்.

அதன் பின்பு தனித்து எந்த நாட்டிலும் ஒரு அரசியல் தலைமைக்கு உதவியளிப்பதில்லை. எந்த அரசியல் தலைமை பலமடைகிறதோ, அதன் பின்னால் நின்றுகொண்டு தமது நலனை நிறைவுசெய்வதே அவர்களின் அணுகுமுறையாகும். மொத்தத்தில் அமெரிக்கப் பாணி தற்போது கிளர்ச்சியாளர் பக்கம் திரும்பியுள்ளது. அதற்கு இன்னோர் வலுவான காரணம் ஒன்றையும் அமெரிக்கா முன்வைக்கத் தவறவில்லை.

அதாவது, ஹெயிட்டிக்கு அருகிலுள்ள கியூபாவே அமெரிக்காவின் பிரதான எதிரி நாடும் - அதுவும் மத்திய அமெரிக்கப் பிரதேசத்தில் அமெரிக்காவை எதிர்த்து கியூபாவுக்கு அருகிலுள்ள ஹெயிட்டியைப் பகைத்துக்கொள்ள அமெரிக்கா முயலுமாயின், அந்தப் பிராந்தியமே அமெரிக்காவிடமிருந்து பறிபோய்விடும். அதனால், அமெரிக்கர்களுக்குக் கொள்கையோ, நட்போ முக்கியம் அல்ல. எந்த ஆட்சி ஹெயிட்டியில் சாத்தியப்படுகின்றதோ, அதனை ஆதரிப்பதே சாதகமானதென் அமெரிக்கா கருதுகின்றது.

இந்தக் கருத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் இன்னோர் விடயத்தைச் சேர்த்துக்கொள்ளலாம். அதாவது, கிளர்ச்சியாளர்களையும், அதிபர் அரிஸ்டிக்கையும் ஒன்று சேர்க்க சர்வதேச சமூகத்தின் ஆதரவில்



ஒரு சமாதானத் திட்டத்தை அமெரிக்கா தயாரித்தது. அத்தகைய திட்டத்தில் அதிகாரத்தைப் பகிர்வது பற்றிய அடிப்படையிலும் 2006 ஆம் ஆண்டுவரை அதிபர் அரிஸ்டிட்கின் பதவியைப் பாதுகாக்கவும் அந்த சமாதான திட்டம் இடமளித்திருந்தது. ஆனால், அதனைக் கிளர்ச்சிக்குழு நிராகரித்ததுடன், பிரான்ஸின் தலையீடும் அதில் அதிகரித்துக் காணப்பட்டது.

இதனால், அமெரிக்கா மெதுவாக அந்தத் திட்டத்தைக் கைவிட்டதுடன், அரிஸ்டிக்கை பதவியிலிருந்து அகற்றவும் ஆயத்தமாகிவிட்டது. இந்த விடயம் தொடர்பாகப் பாதுகாப்புச்சபை கூடியபோது, எந்தத் தீர்மானத்தையும், முடிவையும் முன்வைக்காமல் சபை கலைந்துள்ளது. அதனால், இங்கு பிரதான கேள்வி ஒன்று எழுகின்றது. புதிய உலக ஒழுங்கு உருவாகிய பின்னர் அல்லது 9.11.2003 தாக்குதலுக்குப் பின்னர் உலகத்தில் எந்த மூலையிலும் ஆயுதம் தூக்கிப் போர் புரியும் பிரிவினரே பயங்கரவாதிகள் எனக் கொக்கரிக்கும் அமெரிக்கா, எதுவுமே அவ்வாறு பேசாது மௌனம் சாதிக்கிறது என்பதாகும். அதற்கான காரணம் எது என்பதை சுருக்கமாக நோக்குவோம்.


முதலில் ஹெயிட்டி மக்கள் அரபுக்களோ, இஸ்லாமியர்களோ அல்ல என்பதும், அத்தகைய மதப் பிரிவினருக்கு உதவி புரிபவர்கள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அடுத்து, அந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலனுக்குப் போட்டியாக வேறு அரசுகள் பெரியளவில் இல்லை என்பதும், கியூபாவைப் போன்று ஓர் எதிரியை அமெரிக்கா உருவாக்க விரும்பவில்லை என்பதும் நினைவுகூரத்தக்க விடயமாகும். இறுதியாகப் பயங்கரவாதம் என்பது உலகம் மிரட்டுவது போன்றோ, மிரளுவது போன்றோ ஒரு பெரிய விடயமல்ல என்பதும், அதனைப் பயன்படுத்தி பிராந்திய சக்திகள் இலக்கை அடைய முயல்வதுமே நிகழ்கின்ற அம்சங்களாக உள்ளன. எனவே, பயங்கரவாதம் என்பது பற்றிய அரசியலைப் பற்றி ஹெயிட்டி மக்கள் கொண்டிருக்கும் உணர்வலையே பொருத்தமானது போன்று தெரிகிறது. அதுவே உலகத்திற்குப் புதிய அனுபவமாக அமையலாம் என்பதுவும், அதனை அடிப்படையாகக்கொண்டு உலக விடுதலை போராட்ட அமைப்புக்கள் புதிய அணுகுமுறைகளை வரையலாம் என்பதுவும் கருத்தில் கொள்ளப்படவேண்டிய அம்சங்களாகவுள்ளன.

எனவே, புதிய கருத்தியலை உருவாக்கியுள்ள ஹெயிட்டி அரசியல், அடுத்துவரும வாரங்களில் ஏற்படப்போகும் மாறுதலைக் கொண்டு அதனை நிரந்தரமான கருத்தியலாக அமைத்துக்கொள்ளலாம். எனவே, ஹெயிட்டி அரசியல் ஒரு புதிய ஆரம்பமாக மாறுகின்ற சூழல் காலப்போக்கில் ஏற்பட வாய்ப்புண்டு. ☆

---

நினைவழியா சின்னங்கள்...

# இலங்கையில் முதல் தபால் தொடர்பு அமைச்சர் சிற்றம்பலத்தை கௌரவிக்கும் முத்திரை வெளியீடு



காலஞ்சென்ற கதிரவேலு சிற்றம்பலம் 1898 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 13 ஆம் திகதி பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியைக் கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றார். இவர் றோயல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் பல பரிசில்களைப் பெற்றுள்ளார். அவையாவன - ஆங்கிலக் கட்டுரை பரிசு, டி சொய்சா விஞ்ஞானப் பரிசு, கணிதப் பாடத்திற்கான பரிசு என்பனவாகும். இவர் தனது 15 ஆவது வயதில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியெய்தினார். கதிரவேலு சிற்றம்பலம் தனது மேற்படிப்பை இங்கிலாந்தில் தொடர்ந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கணிதப் பட்டதாரியாக வெளியேறினார். இது மட்டுமல்லாது சட்டப்படிப்பையும் கற்று மிடல் டெம்பில் இருந்து சட்டத்தரணியாக வெளியேறினார்.

இவர் இலங்கைக்குத் திரும்பிய பின்பு அரசாங்க அதிபராகவும், மாவட்ட நீதிவானாகவும் கடமையாற்றினார். இவர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்பு மன்னார் - வவுனியா மாவட்டத் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி, சுதந்திர இலங்கையில் முதலாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் தபால் தந்தி தொடர்பு அமைச்சராக 1948 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்கவால் நியமிக்கப்பட்டார். இதே சபையில் நியமிக்கப்பட்ட மற்றைய அமைச்சர்களில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, ஏ.ரத்னாநயக்க, ஒலிவர் குணதிலக, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, லலிதா ராஜபக்ஷ, பேராசிரியர் சீ.சுந்தரலிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நேற்றைய சபாநாயகருமாகிய ரட்ணாயக்க வத்தேகம - 1964 ஆம் ஆண்டு மாசி மாதம் 3 ஆம் திகதி நடைபெற்ற சிற்றம்பலத்தின் மரண வைபவத்தில் கலந்து இரங்கலுரை ஆற்றும் பொழுது - கிராமம் தோறும் வீட்டுக்கு ஒரு வானொலிப் பெட்டி வழங்கி மக்கள் நாட்டு, உலக நடப்புக்களை அறிந்திருக்க வேண்டும் என்ற அவாவுடனும் மற்றும் வானொலியில் அதிகாலையில் ஒலிக்கும் பல்லின சமயநிகழ்ச்சியில் பௌத்தர்களுக்கு உரித்தான பிரித் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினார் என்று கூறினார்.

கதிரவேலு சிற்றம்பலம் யாழ்ப்பாணத்தில் எல்லோருக்கும் பரிட்சயமான தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தகப்பனார் ஆறுமுகம் கதிரவேலு - நீதிவானாகவும், மாவட்ட நீதிவானாகவும் கடமையாற்றினார். இவரது சிற்றப்பா ஆறுமுகம் கனகரத்தினம் - யாழ்ப்பாண நகரசபையின் முதல் தலைவராகவும் மற்றும் யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகரும் ஆவார்.




சிற்றம்பலத்தின் தாத்தாவின் தம்பி விஸ்வ நாதர் காசிப்பிள்ளை- முடிக்குரிய வழக்கறிஞராகவும், யாழ். இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் விளங்கினார். சிற்றம்பலத்தின் சகோதரர் கதிரவேலு பொன்னம்பலம் - யாழ்ப்பாணத்தின் முதலாவது நகரபிதாவாகவும், அவரது மைததுனர் சீ.காசிப்பிள்ளை யாழ்ப்பாணத்தின் மூன்றாவது நகரபிதாவாகவும் பதவி வகித்துள்ளார்கள். கதிரவேலு சிற்றம்பலத்தின் மகனும், பேரனும் பிரித்தானியாவிலுள்ளனர். முன்னவர் அர்ச்சுனா சிற்றம்பலம் ஒரு முதலீட்டு வல்லுநகராகவும், பின்னவரான பேரன் கணேஷ் சிற்றம்பலம் இளம் வயதில் கல்வியில் சாதனை புரிந்ததால், கின்னஸ் புத்தகத்தில் பல தடவைகள் அவரது பெயர் பதியப்பட்டது. ❑


உண்மை, நேர்மை, துணிவுடன் உதித்த சூ
கள்!
01
அ.ஜோர்ச்
முன்னாள் தலைவர்
கிளி.மாவட்ட கூட்டுறவுச் சபை
02
ச.அரவிந்தன்
முன்னாள் உறுப்பினர்
யாழ். மாநகரசபை
03
செ.பத்மநாதன்
யாழ். மாவட்ட
நலன்புரிச் சங்கம்
04
வீ.ஆனந்தசங்கரி
(சட்டத்தரணி) முன்னாள்
பா.உ. யாழ்ப்பாணம்
05
இரா.சங்கையா
முன்னாள் யாழ். மருத்துவ
பீடத் தொ.நுட்பவியலாளர்
06
செ.கந்தையன்
முன்னாள் மேயர்
யாழ். மாநகரசபை
அமரர்களான தமிழினத் தலைவர்களின் நல் ஆசியுடன்
X
07
வைத்திய கலாநிதி
ந.கிருஷ்ணராசா
08
இ.குணானந்தன்
வங்கி அதிகாரி
09
பெ.சூரியமூர்த்தி (வடமராட்சி)
முன்னாள் நகரபிதா
நகரசபை திருகோணமலை
10
ச.முத்துலிங்கம்
முன்னாள் தலைவர்
உடுவில் கிராமசபை
திரு. வீ.ஆனந்தசங்கரி (சட்டத்தரணி)
- தலைவர் -
தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவில்
சுயேட்சைக் குழு – 01
X
11
இ.சாந்தசொரூபன்
பொறியியலாளர்
12
வைத்திய கலாநிதி
பொ.சிவகுமார்
மீண்டும் உதய சூரியன் பட்டொளியுடன் உதித்திட
இவ் அணியினை ஆதரியுங்கள்
(650)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 30 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள்
# நாடு முழுவதும் பாவனையில் உள்ளன

## உள்துறை அமைச்சின் செயலாளர் தகவ

(கொழும்பு)

நாட்டில் சுமார் 30 ஆயிரம் சட்ட விரோத அயுதங்கள் பாவனையில் உள்ளதெனவும் இதனால் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.எல். ஜுனைட் சம்மந்தப்பட்ட அரச அலுவலர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் -

இந்தச் சட்டவிரோத ஆயுதங்களின் குற்றச் செயல்கள் அதிகரிப்பால் நாட்டில் வாழும் மக்களது பாதுகாப்பின்மை மட்டுமல்ல பல வருடங்களாக கட்டி வளர்த்த இந்த நாட்டின் கௌரவம்கூட அழிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிதார்.

அதிகரித்துவரும் இந்தக் குற்றச் செயல்களைத் தடுப்பது தொடர்பாக கடந்த மாதம் முதல் வாரத்தில் ஒரு கூட்டமொன்றை அவர் நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் மதத் தலைவர்கள், அரசியற்கட்சி அங்கத்தவர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்த கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பயிற்சி முடித்து வெளி யேறும் பொலிஸாரின் எண்ணிக்கை ... உள்ளதாகவும் எனவே ... ணிக்கை அதிகரித்து ... வினைத் திறனைக் ... மெனவும் கலந்துரை ...

அத்துடன் குற் ... களைத் தடுப்பதற்க ... சபை, மாவட்ட இணை ... மற்றும் மாவட்ட பிரா ... யிலான மக்கள் குழு ... அமைப்பதெனவும் முடி ... பட்டது.

# ஆடம்பரமற்ற பிரசாரம் செய்யுங்கள்
# ஆதரவாளரிடம் மிலிந்த கோரிக்கை!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தமது தேர்தல் பிரசாரத்தை ஆடம்பரமற்ற முறையில் மேற்கொள்ளப்போவதாகத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரான மிலிந்த மொறகொட, தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

சுவரொட்டிகள், பதாதைகள், தேவையற்ற சோடனைகளை தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்த வேண்டாம் என அவர் தனது ஆதரவாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், பாடல்களை அதிக சத்தத்துடன் ஒலிபரப்புவதைத் தவிர்க்குமாறும் அவர் தனது ஆதரவாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

# ஜனாதிபதிக்கு கொலைமிரட்டல்
# எஸ்.பி. மீது விசாரணைகள்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கொலை பயமுறுத்தல் விடுத்துள்ள சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக பொலிஸ் மா அதிபர் இந்திரடி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க -

ஜனாதிபதி சந்திரிகா நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து மட்டுமன்றி, நாட்டைவிட்டே துரத்தப்பட்ட நிலையில் தான் எதிர்வரும் சிங்களப் புதுவருடம் கொண்டாடப்படும். அத்துடன், ஜனாதிபதி பதவியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைப்பற்றி விடுவார் என்றும் கூறியிருந்தார்.

இலங்கையின் அரசியலமை ... பின்படி ஜனாதிபதி ஒருவரின் ப ... விக்காலம் முடிந்தால் அல்ல ... அவர் இறந்தால் மட்டுமே ஜனாதி ... தியின் பதவிக்கு வெற்றிடம் ஏற்படு ... எனக் கூறப்படுகிறது. ஆனால், ஜ ... திபதி சந்திரிகாவுக்கு ... இரண்டு ஆண்டுகள் பத ... இருக்க முடியும்.

இப்படி இருக்கும்போது, ஜனா ... பதி பதவி வெற்றிடம் ஏற்படுவத ... யின் சந்திரிகா கொலை செய்யப் ... படல் வேண்டும். அதாவது இறக்க ... வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி ... சந்திரிகாவின் உயிருக்கு ஆபத்து ... ஏற்படுத்துவது தொடர்பான வி ... தில் அமைச்சர் எஸ்.பி.திஸந ... சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று ... ஸாரிடம் முறையிடப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தில் ... மக்கள் சுதந்திர முன்னணி ... போட்டியிடும் வேட்பாளர் ... இந்தப் புகாரைக் கொ ... மேலும் தெரிவிக்கப்பட்டு ...

# தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை
# இந்தியா அங்கீகரிக்க வேண்டும்!

## திருமலை மாவட்ட கூட்டணி வேட்பாளர்

இந்திய அரசு தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை மதித்து நடந்துகொள்ளவேண்டும். இதுவே தமிழினத்தின் ஏகோபித்த வேண்டுகோள் என, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட வேட்பாளர் ரகுநாதன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற வேளையில், அதில கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்திய அரசு தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைகளுக்கு உதவும் வகையில் நடந்துகொள்ள வேண்டும். இதுவே தமிழினத்தின் ஏகோபித்த கோரிக்கை. இதனை அலட்சியம் செய்யக்கூடாது.

இலங்கையில் - தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து வாழும்போது தான் பேரினவாத சக்திகள் எம்மீது ஆதிக்கம் செலுத்தமுடியாமல் போகும்.

நாம் பிரிந்து நின்றால் எம்மை பேரினவாதம் அடக்கி ஆளப்பார்க்கும். இதற்கு முடிவுகிட்டும் வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாக்களித்து, சிறுபான்மையினரின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (04, 10)

### வீடு சின்ன...

கூட்டமைப்பினர் எனது அனுமதியில்லாமல் கட்சியின் வீடு சின்னத்தை பாவிக்கின்றனர்.

எனவே, எனது அனுமதியில்லாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பயன்படுத்தும் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தை தடைசெய்ய வேண்டுமெனக் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தனியார்..

தங்கல - கொடவள கடற்கரைப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. உயிரிழந்தவர் பிரபல வர்த்தகர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### கூட்டமைப்பு...

இந்த விஞ்ஞாபனம் இன்று மாலை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரச் செயலகத்திலிருந்து வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ப)

### வாக்களிப்பு...

வாக்களிப்பு நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஏற்படுத்தப்படுமாயின் அவற்றில் கட்டாயமாக பொலிஸார் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி கருதுகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் ஏற்படுத்தப்படும் வாக்களிப்பு நிலையங்களில் மோசடிகள் இடம்பெறலாம் என நம்புவதாகவும், அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்தது.

புலிகளும் இராணுவத்தினரும் செல்லமுடியாத பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு தேர்தல் ஆணையாருக்கு சட்டரீதியான அங்கீகாரம் இல்லை. எனவே, புலிகளின் பகுதிகளில் எக்காரணம் கொண்டும் தேர்தல் நடத்தக்கூடாது.

அத்துடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஆனந்த சங்கரியும், டக்ளஸ் தேவானந்தாவும் தேர்தலில் போட்டியிடுவதால் இவர்களின் இணககப்பாடின்றி தேர்தல் தொடர்பான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் ஜே.வி.பி மேலும கூறியிருந்தது.

### புலிகளின்...

பதில் வாக்காளர்களுக்கு அசௌகரியங்களைத் தவிர்த்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியலில் பௌத்த பிக்குகள
# ஏற்றுக்கொள்ள முடியாது!

## ராமான்ய மகாநாயக்கர் தெரிவிப்

பௌத்த பிக்குகள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு, ராமான்ய பீடத்தின் மகாநாயக்க வெவல் தெனிய மேதாலர்கார தேரர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ராமான்ய பீடத்தின் விசேட குழு நேற்றுக் கூடி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

பௌத்த தர்மத்தின் ஒழுக்கத்திற்கு அமைய, தேர்தலில் போட்டியிடக் கூடாது எனக் குறிப்பிடப்படாவிட்டாலும் - கூடாது என உணர முடிந்தால் அதனைக் கைக்கொள்ளாது இருப்பதே நல்லது என, பௌத்த மதத்தில் பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாவம் செய்யாதிருப்பது நன்மைகளை வளர்த்துக்கொ ... மனதைத் தூய்மையாக வை ... கொள்வது, பௌத்த மதத்தி ... னையாகும். இவ்வாறான ... மதத்தை பாதுகாப்பதற்கு பெ ... பிக்குகள் நேரடியாக அர ... ஈடுபட்டிருப்பது ஒருபோதும் ... போகாது எனத் தெரிவித் ...

# ஐ.தே.க. வேட்பாளர்...

துப்பாக்கிச் சன்னம் வேட்பாளரின் கையில்பட்டதால் அவருக்கு சிறுகாயமே ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் உள்ள பொருட்களையும் இளைஞர் குழு சேதப்படுத்திவிட்டுச் சென்றதாக, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவம் இதுவாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக, காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, திஹாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் எஸ்.நிஹார் முடினின் வீடு, நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது. இந்தச் சம்பவம் சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

சம்பவத்தின்போது அவரது வீட்டின் கதவு, ஜன்னல்கள் மற்றும் தேர்தல் பிரசாரத்துக்கான கட்அவுட்டுக்கள் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளின் பகுதி....

மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒன்று கிழக்குப் பகுதி மற்றது மேற்குப் பகுதி. மேற்குப்பகுதி என்பது படுவான்கரையாகும். இந்தப் பகுதியில் 79 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றனர். கடந்த தேர்தலில் இவர்கள் கிழக்குப் பகுதிக்கு வந்து வாக்களிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டனர். இந்தமுறையும் இவர்கள் இராணுவத்தினரால் வாக்களிக்க விடாமல் தடுக்கக்கூடும்.

இதற்காக சில மாற்றுவழிகளை சிபார்சு செய்திருக்கிறோ ... களின் கட்டுப்பாட்டுப் பிரதேச ... வாக்குச் சாவடிகள் அமைக்க ... யாது. பொலிஸார் அந்தப் ப ... சட்டபூர்வமாகச செல்ல முடிய ...

அடுத்தது இராணுவச் சூன ... ப் பிரதேசத்தில் வாக்குச் சாவடி அமைப்பது. இல்லாவிட்டால் 55 வீதமான வாக்குளில் முதல் நாள் கிழக்குப் பகுதிக்குவந்து தங்கியிருந்து வாக்களிக்கச் செய்யும் முறையையும் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தா ...

# புலிகளின் கட்டுப்பாட்டு...

கொடுத்துவிடும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி ஆயுதம் தரித்த பொலிஸார் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு செல்லமுடியாது. அவ்வாறு அவர்கள் சென்றால் அது யுத்தநிறுத்த மீறல் ஆகும். இந்த நிலையில் 2001 ஆம் ஆண்டு நடத்தப்பட்டதைப்போன்ற தேர்தலையே நடத்தமுடியும்.

அத்துடன் சூனியப்பிரதேசத்தில் தேர்தல் வாக்களிப்பை நடத்துவது குறித்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும், எதிர்வரும் காலப்பகுதியில் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்காக சர்வதேச நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் முகமாக முக்கிய ... னிப் பிரமுகர் ஒருவர் கொ ... பிலிருந்து செயற்பட்டு வருவத ... வும் தகவல் வெளியாகியுள்ளது.

இது இவ்வாறிருக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பொதுத் தேர்தல் தொடர்பில் தாம் எவ்வித தலையீட்டையும் மேற்கொள்ளவில்லையெனக் கூறியுள்ளது.

கண்காணிப்புக்குழுவின் பேச் ... ளர் அக்னஸ் பிரகரோட்ரயர் ... விக்கையில் -

கண்காணிப்புக்குழுத் தலை ... புறூவ் ஹொவ்டே நேற்று ... தினம் கிளிநொச்சிக்கு விஜ ... செய்தவேளையில், பொதுத்தேர் ... தொடர்பாக எவ்வித கருத்துக்கள ... யும் அங்கு பரிமாறிக்கொள்ள ... வில்லை எனத் தெரிவித்தார்.

# மீண்டும் ஆட்சியைப் பிடி...

வரமுடியும்.

விடுதலைப்புலிகள் தவிர ஏனையவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று முன்னணி தெரிவித்துள்ளதால் அவர்கள் யார் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த பொதுத்தேர்தலில் நாட்டைப் பற்றி தீர்மானம் எடுத்த மக்கள் இந்தமுறை தேர்தல்மூலம் நாட்டின் எதிர்காலம் குறித்து தீர்மானம் எடுக்கவேண்டும். தொடர்ந்தும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதா அல்லது மீண்டும் போர்ச்சூழலை ஏற்படுத்துவதா என்பது பற்றி மக்கள் தீர்மானிக்கவேண்டும்.

2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் பொறுப்பேற்ற வேளை நாட்டில் யுத்தம் நிலவியது. நாம் அதனை நிறுத்தி போர் நிறுத்தத்தை ஏற்படுத்தினோம்.

மக்கள் விடுதலை முன்னணி - இடைக்கால நிர்வாகசபை யோசனையை எதிர்த்து வருகிறது. இதனை, சுதந்திரக் கட்சியின் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் எதிர்த்து வருகிறார். ஆனால் ஜனாதிபதி - பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் இடைக்கால நிர்வாக சபை யோசனையை ஏற்றுக்கொள்வதாகக் கூறிவருகிறார்.

ஜே.வி.பி. இராணுவத்தை முழுமையாக ஈடுபடுத்தவேண்டும் என்று கருத்துத் தெரிவித்துவருகிறது. ஜனாதிபதி இராணுவத்தை முழுமையாக ஈடுபடுத்தமுடியாது எனக்கூறி வருகிறார்.

அனைத்தும் ஒன்றுக்கொன்று முரணானதாக அமைந்துவருகிறது. இதனால் இரண்டு கட்சியும் இணைந்த கூட்டணிக்கு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. (01)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட